janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2024 மார்ச் 31 - ஏப்ரல் 06 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 52

ஜனசக்தி தொலைக்காட்சி SUBSCRIBE

# விவசாயிகளுக்கு துரோகம் செய்த பாஜக, அதிமுக!

## விரட்டியடிக்குமாறு முதலமைச்சர் ஸ்டாலின் வேண்டுகோள்




**விவசாயிகளுக்கு பச்சைத் துரோகம் செய்த எடப்பாடி பழனிசாமியையும் ஒன்றிய பாஜக அரசையும் தமிழ்நாட்டு மக்கள் விரட்டியடிக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.**

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. கடல் அலை என திரண்டிருந்த மக்கள் கூட்டத்தினிடையே, இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் நாகப்பட்டினம் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வை.செல்வராஜ், தஞ்சாவூர் தொகுதி திமுக வேட்பாளர் முரசொலி ஆகியோருக்கு வாக்கு சேகரித்து முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது,



"ஆட்சிப் பொறுப்பை கையில் வைத்திருந்த போது, மக்களுக்கு எதுவுமே செய்யாத எடப்பாடி பழனிசாமி; ஒன்றிய அரசில் பாஜகவுடன் சேர்ந்து, தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையும் செய்யாமல், துரோகங்களை மட்டுமே செய்த பழனிசாமி அவர் பங்கிற்கு ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அது தேர்தல் அறிக்கை அல்ல; பழனிசாமியின் பம்மாத்து அறிக்கை! அவரிடம் அதிகாரம் இருந்தபோது, ஒன்றிய அரசிடம் இருந்து

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்



திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் தோழர் கே.சுப்பராயன் 25.03.2024 அன்று மாவட்ட தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். அவருடன் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், காங்கிரஸ் கட்சி மாநகர் மாவட்டத் தலைவர் ஆர்.கிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே.காமராஜ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



நாகப்பட்டினம் நாடாளுமன்றத் தொகுதியில், இந்தியா கூட்டணி சார்பாக போட்டியிடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் வை.செல்வராஜ் 25.03.2024 அன்று நாகை மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தலைமைத் தேர்தல் அதிகாரியுமான ஜானி டாம் வர்கீசிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

- பாஜக கூட்டணிக்கு ஓட்டு ஒரு கேடா?
- கருப்பு பணத்தை மீட்டு வந்தாயா?
- கள்ளப்பணத்தை கண்டுபிடித்தாயா?
- ஊழலை ஒழித்தாயா?
- புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கினாயா?
- வறுமையை ஒழித்தாயா?

கட்சிக் கடிதம்

# பாசிசத்தை வீழ்த்துவீர்





போர்க்குணமிக்க தோழர்களே!

**பாசிசம் குறித்து மற்றெல்லோரையும் காட்டிலும் நன்கு அறிவீர்கள். பாசிசம் எத்தகைய தகிடுதத்தங்களையும் மேற்கொள்ளும். ஈவு இரக்கமற்ற முறையில் கொன்று குவிக்கும். குழந்தை என்றும், பெண்கள் என்றும் முதியவர் என்றும் பாராது படுபாதக செயல்களை மேற்கொள்ளும்.**

இவைகள் கற்பனை அல்ல, இரண்டாம் உலகப்போரில் நடைபெற்ற கொடுமைகளும், கொடுங்கோல்களையும் உலகம் அவ்வளவு எளிதில் மறந்து விடாது.

◆ 2 கோடி மக்களை பலி கொண்டது. கோடிக்கணக்கான மக்கள் தங்கள் உடல் அங்கங்களை இழந்தனர்.

◆ ரத்த ஆறு பெருக்கெடுத்து காவிரியை போல், கங்கையைப் போல் ஓடி உறைந்தது.

◆ பல லட்சக்கணக்கான மக்கள் சிறை கொட்டடியில் சித்திரவதைக்கு உள்ளாகினர்.

ஆனாலும் பாசிசம் வெற்றி பெற முடியவில்லை. தோல்வியில் துவண்டு, மண்ணோடு மண்ணாக மடிந்திட்ட வரலாற்றை அறிவீர்கள்.

ஆனாலும் பாசிசம் அவ்வப்போது தலை தூக்கும், படம் எடுத்து ஆடவும் செய்யும்.

இன்று நம் நாட்டில் கடந்த பத்தாண்டு காலமாக மெல்ல, மெல்ல ஆடி, தற்போது படம் எடுத்து ஆடுவது மட்டுமல்ல, வெறிபிடித்து ஆடுகின்றது.

அகப்படுவோர் அனைவரையும் கொத்தி, விஷம் கொட்டி தனது வெறித்தனத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

தான் செய்த தவறுகள், ஊழல்கள் அனைத்தையும் முக்காடு இட்டு மூடி மறைத்து, மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தி தான் யோக்கியவான் என்று தனக்குத்தானே பட்டம் சூட்டிக் கொள்கிறது.

நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் ஜனநாயக முறையில் நடைபெறுமா? என்ற பெரும் ஐயப்பாடு நாடு முழுவதும் எழுந்துள்ளது.



இந்தியாவின் ஜனநாயகம் படுகொலைக்கு உள்ளாகுமோ! என்ற ஐயப்பாடு மிகுந்த கவலை அளிக்கிறது.

பத்தாண்டு காலம் பதவி சுகம் அனுபவித்தவர்கள். மக்களுக்கு எதிரான போரையே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் மக்களுக்காகத் தான் கட்சி நடத்துகின்றோம் என்பார்கள். நள்ளிரவு கூட்டணி அமைக்கின்றார்கள்.

இவர்கள் சமூக நீதி குறித்தும் பேசுகிறார்கள்.

இவர்கள் குறித்து ஜூனியர் விகடன் வார இதழ் (27.3.2024) ஒரு செய்தி வெளியிட்டு உள்ளது.

அச்செய்தியில் "தங்கள் பக்கம் வந்த தோட்டத்துக் கட்சிக்கு தட்சணையாக 200 ஸ்வீட் பாக்ஸ்களை காணிக்கையாக்கி இருக்கிறதாம் டெல்லி. கூடவே இலையை உதறியதற்கு பரிசாக பெரிய இடத்து மாப்பிள்ளை ரூட்டிலும் காணிக்கைக் கறந்து விட்டார்களாம் டபுள் தமாக்கா!' என்று வெளியிட்டுள்ளது.

இதனைப் படிப்போர் அனைவரும் இதன் விவரங்களை அறிவார்.

மேலும் ஜூனியர் விகடன் அதே பகுதியில் இன்னொரு செய்தி "ஓட்டுக்கு தாராளம் காட்ட முடிவெடுத்து இருக்கும் கமலக் கட்சி, தமிழகத்தைச் சேர்ந்த தொழிலதிபர்களிடம் இதற்காக ஒரு சுற்றுப் பேசி முடித்து விட்டதாம். இதற்கான டார்கெட்டும் நிர்ணயிக்கப்பட்டு விட்டதாம்".

இச்செய்தியும் உண்மை என்றும், இதில் உள்ளவர்கள் யார் என்றும் எல்லாருக்கும் விளங்கக்கூடியதே.

அதே பகுதியில் மேலும் ஒரு செய்தி "எடக்கானவர்க்கு நெருக்கமான பசை உள்ள ஒடிசா நிறுவனத்திடம், சேலம் பக்கம் உங்கள் தாராளத்தை காட்டாதீர்கள், மீறினால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என மெல்லிய மிரட்டலை விடுத்திருக்கிறதாம் டெல்லி".

இந்த மூன்று செய்திகளும் யாரை, எந்த கட்சியை குறிக்கிறது என்று எழுதி தெரிய வேண்டிய ரகசியம் இல்லை.

அனைத்து விதமான அயோக்கியத்தனமான காரியங்களையும் செய்யத் துணிந்தவர்கள், செய்து கொண்டு இருப்பவர்கள். மீண்டும், மீண்டும் ஆட்சிக்கு வர துடியாய் துடிக்கின்றார்கள்.

தாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு தடையாய் இருக்கும் இந்தியா கூட்டணியை அரசியல் ரீதியாக எதிர்கொள்ளத் திராணி அற்றவர்கள், குறுக்கு வழி தேடுகின்றார்கள்.

நாடறிந்த கட்சி, விடுதலைக்கு போராடிய கட்சி, நாட்டிற்கு நேரு உட்பட பல நல்ல தலைவர்களை தந்திட்ட கட்சியான காங்கிரஸ் கட்சியை செயல்படாமல் தடுக்க, தேர்தலில் பங்கு பெறாமல் முடக்க அதன் வங்கிக் கணக்கை முடக்கி விட்டார்கள். காங்கிரஸ் கட்சியின் அனுமதியின்றி ரூபாய் 150 கோடியை வங்கியிலிருந்து எடுத்துக்கொன்டார்கள்.

டெல்லியில் மோடிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி வரும் ஆம் ஆத்மி கட்சியை முடக்க, டெல்லி மாநில துணை முதல்வர் பல மாதங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும் அவர்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சிறையில் அடைக்கப்பட்டது மட்டுமல்ல, அக்கட்சியின் தலைவரும், டெல்லி முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவைகள் மட்டுமின்றி, பாஜக ஆட்சியில் இல்லாத எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் வீடுகளில் அமலாக்க துறையின் சோதனை என்ற பெயரால் கைதுகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.

பல்வேறு கட்சிகளில் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்களுக்கு காட்ட வேண்டியவைகளை காட்டி, தங்கள் கட்சிக்கு இழுப்பதும் தொடர்கின்றது. தேர்தலுக்குப் பிறகு திமுக உள்ளிட்ட கட்சிகள் இருக்காது என்று அச்சுறுத்துவது.

தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி கட்சி சின்னங்களை முடக்குவது.

தங்களின் அடியாட்களாக பயன்படுத்தி வரும் மாநில ஆளுநர்களை கொண்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு எதிராக போட்டி அரசாங்கத்தை நடத்தி ஜனநாயக படுகொலையை நிகழ்த்துவது.

அப்பட்டமான ஜனநாயக விரோத செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள கட்சி தான் பாஜக என்பதனை, நாட்டு மக்கள் உணர்ந்துள்ள நிலையில் பொதுத் தேர்தலை சந்திக்க உள்ளோம்.

தேர்தல் போர் என்பது பாசிசத்திற்கு எதிரான ஒரு மகத்தான போர். இப்போரில் பாசிசம் வீழ்த்தப்பட வேண்டும்.

அதனை வீழ்த்திட தவறிவிட்டால் எதிர்கால தலைமுறை நம்மை ஒருபோதும் மன்னிக்காது.

வெள்ளையர்களின் கொடுங்கோல் ஆட்சியை அகற்ற, நமது முன்னோர்கள் மேற்கொண்ட போராட்டங்களும், தியாகங்களும் நம்மை இன்று சுதந்திரமானவர்களாக நடமாடச் செய்துள்ளது.

அவர்கள் செய்த தியாகங்களுக்கெல்லாம் துரோகம் இழைக்கும் பாசிச கும்பல், இன்று நாட்டை ஆக்கிரமித்துள்ளது.

பாசிச ஆக்கிரமிப்பை அகற்றி நாட்டை காக்க நடத்திடும் போர் தான் நடைபெறும் தேர்தல்.

இம்மகத்தான போரில் நாம் ஒவ்வொருவரும், போர்குணம் மங்காது, முன்னனிப் படைவீரனாக களம் காண்போம்.

நாட்கள் மிகக் குறைவு, ஏப்ரல் 19ஆம் நாள் வெகு தூரத்தில் இல்லை.

நொடிப் பொழுதையும் வீணாக்காது, கண் துஞ்சாது, கடமையாற்றி வீழ்த்துவோம் பாசிசத்தை! ஜனநாயகத்தைக் காப்போம்!

மீண்டும் சந்திப்போம்! வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

◆ **இபிஎஸ்-ஓபிஎஸ் இரட்டை! இரட்டைக்கு பாஜக போட்டது மொட்டை!**

◆ **இந்தியா கூட்டணிக்கு ஓட்டு! பாசிச பாஜக கூட்டணிக்கு வேட்டு!**

**2029ஆம் ஆண்டு முதல் 'ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை அமல்படுத்தலாம்' என ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழு குடியரசுத் தலைவரிடம் தனது பரிந்துரை அறிக்கையை தாக்கல் செய்துள்ளது.**

18 ஆயிரத்து 626 பக்கங்கள் கொண்ட பரிந்துரையை ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடம் வியாழனன்று நேரில் வழங்கியுள்ளது. அதில், 2029ஆம் ஆண்டு முதல் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை அமல்படுத்தலாம் என்று பரிந்துரை வழங்கியுள்ளது.

### 2029 முதல் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டம்




முதலில், மக்களவை தேர்தல்கள் மற்றும் மாநில சட்டமன்றத் தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடத்தப்பட வேண்டும்,

அதைத் தொடர்ந்து 100 நாட்களுக்குள் உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

பொது வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகளை இந்திய தேர்தல் ஆணையம் மாநில தேர்தல் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தயாரிக்க வேண்டும்.

ஒரேநாடு ஒரே தேர்தல் நடத்த ஒரே வாக்காளர் பட்டியலை தயாரிக்க வேண்டும். ஒரே வாக்காளர் அட்டை கொண்டு வருவதற்கும் திருத்தம் கொண்டு வரவேண்டும்''

என்று ராம்நாத் கோவிந்த் குழு தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

# அதிபர் ஆட்சியை நோக்கி ஆபத்து

### முக்கியப் பரிந்துரைகள்

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களின் ஆயுட்காலத்தை ஒருங்கிணைப்பது அவசியம். அதற்கேற்ப குடியரசுத் தலைவர் அறிவிக்கை வெளியிடவேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து நாடாளுமன்றம் கூடும் நாளை நியமன நாளாக கொண்டு குடியரசுத் தலைவர் என்று அறிவிக்கை வெளியிடுகிறாரோ, அந்த நாளில் இருந்து ஒரே நாடு ஒரே தேர்தலுக்கான பதவிக் காலம் தொடங்கும்.

அறிவிக்கைக்குப் பின் நடைபெறும் தேர்தல்கள் மூலம் உருவாகும் சட்டமன்றங்களின் ஆயுட்காலம் நாடாளுமன்ற ஆயுட்காலத்துடன் முடிவடையும்.

தொங்கு சட்டப்பேரவை, ஆட்சி கவிழும் நேரங்களில் இடைத் தேர்தல்கள் நடத்திக் கொள்ளலாம். எனினும் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடியும்போது சட்டமன்றங்களின் ஆயுட்காலமும் முடியும்.

### அரசியலமைப்பு சட்டத்தின் கூட்டாட்சிக்கு எதிரானது

"தேர்தல் நடத்துவதை வெறும் செலவுப் பிரச்சனையாகச் சுருக்கிவிட முடியாது. ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்படும்போது மாநில அரசுகளின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்பே கலைக்க வேண்டிய சூழல் உருவாகும். இது கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்ற மக்களவை மற்றும் சட்டப்பேரவையின் காலம் ஐந்து ஆண்டுகள். அதேநேரம், அமைச்சரவை முடிவு அடிப்படையிலும், அவசர பிரகடனத்தைச் சுட்டிக்காட்டியும் ஆளுநரும் ஆட்சியைக் கலைக்கலாம். ஆனால், ஒரு ஆட்சி என்னென்ன காரணங்களுக்காக கலைக்கப்படலாம் என எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தி இருக்கிறது. அதற்காக ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதை காரணம் காட்டி ஒரு ஆட்சி யைக் கலைக்க முடியாது. 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' என்பதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைப்பது என்பது, மக்கள் எண்ணத்துக்கு எதிரானது.

இந்தத் திட்டத்துக்காக அரசைக் கலைத்தால், தேர்தலுக்காக செலவிடப்பட்ட மக்களின் வரிப்பணம் வீணாகும். 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பது நடைமுறைக்கு ஒத்துவராத திட்டம்'' என கம்யூனிஸ்ட் கட்சிகள், காங்கிரஸ், திமுக உள்ளிட்ட நாட்டின் பெரும்பாலான எதிர்க்கட்சிகள் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### எதிர் விளைவுகள்

இந்திய நாடாளுமன்றத்தை அதிபராட்சி முறையை திணிக்கும் ஆபத்தான போக்காம். 1981 முதல் 2024 வரை நடைபெற்ற 18 பொதுத் தேர்தல்களும் ஒரே கட்டமாக நடத்தப்படவில்லை..

தற்போது நடைபெறும் 18 வது பொதுத் தேர்தல் கூட ஏழு கட்டமாக நடைபெறுகிறது.

இதிலும் கூட ஆந்திரா ஒரிசா போன்ற மாநிலங்களில் நாடாளுமன்றத் தேர்தலும் சட்டமன்றத் தேர்தலும் வெவ்வேறு கட்டங்களில் நடத்தப்படுகிறது!

நாடாளுமன்றத்திற்கான பதவி காலம் முழுமை பெற்றதால் சட்டமன்றத்திற்கான பதவிக்காலம் பறிக்கப்படுகிறது...

கலைக்கப்படும் சட்டமன்றங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டாலும் நாடாளுமன்றத் தேர்தல் வரை மட்டுமே நீடிக்கும்.

இது மாநிலங்களின் ஜனநாயக உரிமையை பறிப்பதாகும்.

# உண்மை கண்டறிய தனிப்பிரிவுக்கு உச்ச நீதிமன்றம் தடை

சமூக வலைத்தளங்களில் மத்திய அரசு குறித்த பகிரப்படும் தவறான தகவலை அடையாளம் காணும் உண்மை கண்டறியும் பிரிவை அமைப்பதற்கான அறிவிக்கைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது.

பத்திரிகை தகவல் அலுவலகத்தின்கீழ் (பிஐபி) செயல்படும் உண்மை கண்டறியும் பிரிவை அமைப்பதற்கான அறிவிக்கை வெளியான நிலையில், உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும், இந்த விதியில் தொடர்பாக மும்பை உயர்நீதிமன்றம் பிறப்பித்து உத்தரவை உயர் உச்சநீதிமன்றம் ரத்து செய்தது.

தகவல் தொழில்நுட்ப விதிகள், 2021 இல் மத்திய அரசு சில திருத்தங்கள் மேற்கொண்டது. அதை விதிகள் கடந்த ஆண்டு ஏற்பட 6 ஆம் தேதி அமலுக்கு வந்தன.



மத்திய அரசு தொடர்பான போலியான, தவறான தகவல்களை கண்டறிவதற்காக உண்மை கண்டறியும்பிரிவை அமைப்பது குறித்த சட்டவிதியில் அதிக இடம் பெற்றுள்ளன. இதன்படி, சமூக வலைதளங்களில் கண்டறியப்படும் மத்திய அரசு குறித்த போலியான தகவலை, சம்பந்தப்பட்ட சமூக வலைத்தள நிறுவனம் நீக்க வேண்டும். இதைச் செய்யத் தவறினால் அந்த சமூக வலைத்தளத்தின் நிறுவனத்திற்கு வழங்கப்படும் சட்ட பாதுகாப்பு ரத்து செய்யப்படும்.

இந்தத் திருத்தப்பட்ட விதிகளை எதிர்த்து மும்பை உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றை விசாரித்த நீதிபதிகள் கௌதம் பட்டேல், நீலா கோகலே ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த ஜனவரியில் மாறுபட்டு தீர்ப்புகளை அடித்தது. இதையடுத்து இந்த வழக்கு தனி நீதிபதி ஏ. எஸ். சந்துர்கர் அமர்வுக்கு மாற்றப்பட்டது. கடந்த மார்ச் 11 ஆம் தேதி இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, உண்மை கண்டறியும் பிரிவை அமைப்பதற்கு இடைக்கால தடைவிதிக்க மறுத்துவிட்டார்.

இதனிடையே, உண்மை கண்டறியும் பிரிவை ஏற்படுத்துவதற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டது.

மும்பை உயர் நீதிமன்றத்தின் உத்தரவு எதிர்த்து நகைச்சுவையாளர் குணால் காம்ரா, எடிட்டர்ஸ் கில்ட் ஆஃப் இந்தியா சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்,



நீதிபதிகள் ஜெ.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன்பாக வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

மக்களவைத் தேர்தல் நேரத்தில் இப்பிரிவு அமைக்கப்படுவது வாக்காளர்களுக்குச் சென்றடைய வேண்டிய தகவல்களைக் கட்டுப்படுத்துவதாக அமையும்.

மத்திய அரசு தொடர்பான குறிப்பிட்ட தகவல்கள் என்றில்லாமல் அனைத்துத் தகவல்களும் மக்களைச் சென்றடைய வேண்டிய நேரம் இது. இந்த ஏப்ரல் 15ஆம் தேதி மும்பை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் நிலையில், உண்மை கண்டறியும் பிரிவை ஏற்படுத்த அவசரமாக அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உண்மை கண்டறியும் பிரிவு, அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 19 இன் அடிப்படை உரிமையான பேச்சுரிமை மற்றும் கருத்துரிமைக்கு எதிரானது என எடிட்டர்ஸ் கில்ட் ஆப் இந்தியா சார்பில் ஆஜரான வழக்குரைஞர் ஷதன் ஃபராசத் தெரிவித்தார்.

இதற்கு நீதிமன்ற அமர்வு, 'உயர்நீதிமன்றம் விசாரித்து வரும் வழக்கு அரசமைப்பின் பிரிவு 19 இன் பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை தொடர்பாக முக்கிய கேள்வியை எழுப்புகிறது. இடைக்கால தடை விதிக்கும் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில், அண்மையில் வெளியான அறிவிக்கைக்கு தடை விதிக்கிறோம். இது தொடர்பான விதி குறித்து உயர் நீதிமன்றம் முடிவு எடுக்கும் வரை தடை நீடிக்கும் என்றது. பாஜகவுக்கு அடி மேல் அடி சம்மட்டி அடி கொடுக்கிறது உச்ச நீதிமன்றம்.

**◆ ஜனநாயகத்தை சீர்குலைக்கும் வகுப்புவாதம்!**
**◆ வகுப்புவாதத்தை முறியடித்து ஜனநாயகத்தை மீட்டெடுப்போம்!**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 52

## மோடிக்கு விதி இல்லை!

காங்கிரஸ் கட்சியின் சமூக ஊடகப்பிரிவு தலைவரும், முன்னாள் பத்திரிகையாளருமான சுப்ரியா ஷிராண்டே மீது உடனடியாக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய மகளிர் ஆணையம் வரிந்து கட்டி இந்திய தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதி இருக்கிறது.

கங்கணா ராவத் என்ற இந்தி நடிகை பிஜேபி சார்பில் இமாச்சலப் பிரதேசத்தின் மண்டி தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருக்கிறார். திரைப்படங்களில் மிக மிக கவர்ச்சிகரமாக நடித்து அவர் புகழ்பெற்றவர். சிக்கனமாக உடையணிந்த அவரது ஒரு படத்துடன், இவர்தான் வேட்பாளர் என்ற ஒரு பதிவு சுப்ரியா ஷிராண்டே சமூக ஊடகப் பக்கங்களில் வெளியிடப்பட்டது என்பதே புகாருக்கு காரணம்.

தனது (ட்விட்டர்) எக்ஸ் பக்கத்தைப் போலவே யாரோ போலியாக உருவாக்கி, அதில் அந்தப் படத்தை வெளியிட்டு, பிறகு தனது முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களில் பகிர்ந்து உள்ளதாக சுக்ரியா தெரிவித்துள்ளார். உடனே அப்படத்தை நீக்கியது மட்டுமல்லாமல், இதுகுறித்து ட்விட்டருக்கு அவர் புகாரும் அனுப்பி இருக்கிறார்.

மணிப்பூரில் பெண்கள் நிர்வாணமாக தெருவில் இழுத்துச் செல்லப்பட்டபோது தேசிய மகளிர் ஆணையம் மூடிக்கொண்டிருந்தது வாயை. ஆனால் இப்போது தண்டனை வழங்கியே தீர வேண்டும் என எகிறிக் குதிக்கிறது!

சாகும் வரை சிறை வைக்கப்பட்ட ஸ்டான் சாமியின் கணினியில் ஆட்சேபகரமான ஆவணங்கள் இருந்ததாகத்தான் கைது செய்யப்பட்டார். ஆனால் அவையெல்லாம் வெளியில் இருந்து அவருக்கு தெரியாமல் உட்பகுத்தப்பட்டவை என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே சுப்ரியா சொல்வதிலும் உண்மை இருக்கும்.

காங்கிரஸ் கட்சியின் சமூக ஊடகப் பிரிவு தலைவரை, இந்தத் தேர்தலில் செயல்பட விடாமல் முடக்கி அகற்றும் உள்நோக்கம் தெளிவாகத் தெரிகிறது.

பிரதமர் மோடி சேலத்தில் பேசும் போது, "சக்தி வழிபாடு என்பது இந்து மதத்திற்கு உரியதாகும். அதனை இந்தியா கூட்டணி கட்சிகள் தொடர்ச்சியாக, வேண்டுமென்றே இழிவு செய்கிறார்கள். அவர்கள் அழிக்கப்பட வேண்டும்" என்று ஒரு பொய்யை பகிரங்கமாகப் பேசினார்.

தேர்தல் ஆணையத்தின் நடத்தை விதிகளில், "பல்வேறு சாதி, இனம், மதம், மொழியைச் சார்ந்த மக்களிடையே வேறுபாடுகளை தீவிரமாக்கும் வகையிலான செயலிலோ, ஒருவருக்கொருவர் இடையில் வெறுப்பை உருவாக்கும் வண்ணம் அல்லது பதற்றத்துக்கு வழி செய்யும் எந்த செயலிலோ எந்த ஒரு கட்சியோ வேட்பாளரோ ஈடுபடக் கூடாது" என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மோடி தேர்தல் நடத்தை விதிகளை மீறி விட்டார், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான இ.ஏ.எஸ்.சர்மா, தேர்தல் ஆணையத்திடம் புகார் செய்திருக்கிறார். ஆனால் இதற்கு இதுவரை எந்த பதிலும் இல்லை.

அதனைச் சுட்டிக்காட்டி மீண்டும் ஒரு கடிதத்தை எழுதியுள்ளார். அதில்,

"ஒரு அரசியல் கட்சித் தலைவர், அதுவும் பிரதமர் இவ்வாறு பேசுவது சட்டம் மீறலா, இல்லையா?

ஒரு சாதாரண குடிமகன் புகார் தந்தால் அதை தேர்தல் ஆணையம் ஏற்காதா?

பிரதமர் இந்திய தேர்தல் ஆணையத்துக்கு பதில் சொல்ல வேண்டியவர் இல்லையா? மோடிக்கு ஒரு விதமான தேர்தல் விதிகள் மற்றவர்களுக்கு வேறு விதிகள் என்று உள்ளதா?

எனது புகார் மீது ஆணையம் நடவடிக்கை எடுத்ததா இல்லையா? ஒருவேளை அதை நிராகரித்து இருந்தாலும் அதனைப் பொது வெளியில் ஆணையம் சொல்ல வேண்டாமா?

ஆளுங்கட்சியால்தான் தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதால், அந்தக் கட்சிக்கு எந்தத் தொந்தரவும் வந்து விடக்கூடாது என்று கருதுகிறார்களா?

ஆணையத்தின் செலவுகள் அனைத்தும் மக்கள் பணம் என்பதால், அந்தப் பணத்தைக் கொடுத்த மக்களுக்கு பதில் சொல்லும் கடமை தேர்தல் ஆணையத்துக்கு கிடையாதா? அரசியல் சார்பற்று, அச்சமின்றி, சுதந்திரமாக தேர்தல் ஆணையம் செயல்படுகிறதா, இல்லையா? என பல கேள்விகளை எழுப்பி இருக்கிறார். அதற்கும் ஆணையம் பதிலளிக்கவில்லை.

மோடியைத் தொடாத தேர்தல் ஆணையத்தின் கைகள், சுப்ரியாவை தண்டித்து விடலாம். ஜெர்மனியில் சர்வாதிகாரத்தை கைப்பற்றும் முன்பு ஹிட்லர் நடத்திய தேர்தலில் நடந்தது போலவே, இப்போதும் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

அந்தத் தேர்தலுக்குப் பின்பு ஜெர்மனியில் ஏற்பட்ட நிலைமை, இந்தியாவிலும் ஏற்பட்டு விடாமல் தடுக்க வேண்டியது வாக்காளர்களின் கடமையாகும்.

# பாஜக டெபாசிட் இழக்க வேண்டும்

## நீதிபதி அரி பரந்தாமன் வேண்டுகோள்




ஒன்றிய ஆட்சி அதிகாரத்திலிருந்து மோடியை, பாஜகவை அகற்ற வேண்டும் என முன்னாள் நீதிபதி அரி பரந்தாமன் கூறியுள்ளார்.

கோவையில் தமிழ்நாடு பொதுமேடை அமைப்பின் சார்பில், 'மோடி ஆட்சி தொடரலாமா?' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், முன்னாள் நீதிபதி அரி பரந்தாமன் உரையாற்றினார். அப்போது,

"தமிழ்நாட்டின் மீது பிரதமர் மோடிக்கு அண்மைக்காலமாக காதல் வந்திருக்கிறது. வாரத்திற்கு இரண்டு முறை தமிழ்நாட்டுக்கு வருகிறார். நவம்பர், டிசம்பர் மாதங்களில் வரலாறு காணாத அளவுக்கு வெள்ள பாதிப்பு தமிழ்நாட்டில் ஏற்பட்டது. சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்களும், பணமும் மனித இழப்புகளும் ஏற்பட்டன. அப்போது, பிரதமர் மோடி வரவில்லை. அவருடைய மனம் துடிக்கவில்லை.

மணிப்பூர் எரிந்து கொண்டிருக்கிறது. இரு இன மக்கள் மோதிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாநிலத்துக்கு பிரதமர் மோடி இதுவரை செல்லவில்லை. அவர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சென்னைக்கும் தூத்துக்குடிக்கும் அவர் வராததில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? மக்கள் செத்துக் கொண்டிருக்கும் மணிப்பூருக்கு கூட செல்லாதவரை ஏன் பிரதமராக வைத்திருக்க வேண்டும்?

வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களுக்கு இதுவரை ஒன்றிய மோடி அரசு ஒரு பைசாகூட வெள்ள நிதி தரவில்லை.

மெட்ரோ திட்டத்திற்கு தமிழ்நாடு அரசும் ஒன்றிய அரசும் சரி பாதி தொகைகளை வழங்க வேண்டும். ஆனால், அந்த மெட்ரோ திட்டத்திற்கு நிதி வழங்காத மோடியை, நாம் ஏன் தோற்கடிக்கக் கூடாது?

இந்தியாவில் 20 சமஸ்கிருத பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஆனால், ஒன்றிய அரசு ஒரே ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் வைத்திருக்கிறதா? தமிழில் வழக்காட அனுமதிக்க வேண்டும் என வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்துகின்றனர். அண்ணாமலை ஏன் அங்கு செல்லவில்லை?

இந்த அதிகாரம் ஒன்றிய அரசிடம் தானே இருக்கிறது. மெட்ராஸ் ஹைகோர்ட்டையே இன்னும் சென்னை, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி நீதிமன்றம் என ஏன் மாற்ற மாட்டோம் என்கின்றனர்.

சேலத்தில் பேசும்போது திமுக, காங்கிரஸ் கட்சிகள் இந்துக்களை அவமதிக்கின்றனர் என்கின்றார் பிரதமர் மோடி. மதத்தைப் பற்றி பிரதமர் பேசுகின்றார். வைக்கத்தில் தெருவில் நடக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டை போட்டது இந்துவா, இல்லையா? அந்த வர்ணாசிரமம்தான் வேண்டாம் என்கிறோம்.

இந்தியாவில் மோடி அரசை வீழ்த்த வேண்டும் என நாங்கள் சொல்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 40 தொகுதிகளிலும் பாஜகவை டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும். குறிப்பாக கோவையில் அண்ணாமலை டெப்பாசிட் வாங்காத அளவுக்கு வீழ்த்தப்பட வேண்டும்" என்று நீதிபதி அரி பரந்தாமன் கூறினார்.

### பாரத் மாதாகி ஜே!



" 'பாரத் மாதா கி ஜே' கோஷத்தை அஜிமுல்லாகான் என்ற இஸ்லாமியர் உருவாக்கினார், இஸ்லாமியர் உருவாக்கியதால் இந்த கோஷத்தை சங்பரிவார் அமைப்புகள் கைவிடுமா?"

கேரள முதல்வர்
**பினராயி விஜயன்**
கேள்வி

### இந்த வார கார்டூன்





த.லெனின்

# பாஜக அணி வேட்பாளர்கள் லட்சணம் பாரீர்!

**குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதைப் போல தமிழகத்தில் பாஜக வளர்ந்தது விட்டது போன்ற ஒரு தோற்றத்தை கட்டமைக்க நினைக்கிறது, திமுகவுக்கு தாங்களே மாற்று என்று ஏமாற்றி வருகிறது.**









தங்களது கட்சி மிக வேகமாக வளர்ந்து அண்ணா திமுகவை பின்னுக்குத் தள்ளிவிட்டு தாங்கள் இரண்டாவது இடத்தில் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தையும் ஏற்படுத்தி வருகின்றனர். எலும்பு துண்டுக்கு ஆசைப்படும் கார்ப்பரேட் ஊடகங்களும் பாஜக தமிழ்நாட்டில் ஐந்து இடங்களில் வெற்றிபெறும் என்றும், அண்ணா திமுக 4 நாடாளுமன்ற தொகுதிகளில் தான் வெற்றி பெறும் என்றும் தொடர்ந்து ஒரு கருத்து திணிப்பை நடத்தி, தங்களது எஜமான விசுவாசத்தை காட்டி வருகின்றனர்.

### வேட்பாளர் தட்டுப்பாடு

ஆனால் வேட்பாளர்களை களமிறக்குவதில் பெரும் குழப்பத்திற்கு ஆளாகி விட்டது பாஜக.

குறிப்பாக, கடந்த பிப்ரவரி மாதம் மத்தியப் பிரதேச ராஜ்யசபா எம்.பி.யான முருகன், இப்போது நீலகிரி மக்களவைத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல், தெலங்கானா மற்றும் புதுச்சேரி ஆளுநராக இருந்த தமிழிசை சவுந்தரராஜனுக்கு தென் சென்னையில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அது போலவே திருநெல்வேலி தொகுதி எம்எல்ஏவாக இருக்கும் நயினார் நாகேந்திரனுக்கு, திருநெல்வேலி மக்களவையில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாநிலத் தலைவராக செயல்படும் அண்ணாமலை தனது சொந்த தொகுதியான கரூரில் போட்டியிடாது கோயம்புத்தூரில் களம் காண்கிறார்.

முன்னாள் கவர்னர் தமிழிசை போட்டியிட விரும்பியது தூத்துக்குடி. ஆனால் அவருக்கு வழங்கப்பட்டது தென் சென்னை.

இப்படி தொகுதிகளை மாற்றி, மாற்றி நிற்பது கூட உள்குத்து வேலையாகத்தான் இருக்குமோ என்று பாஜகவினரையே ஐயப்பட வைக்கிறது.



புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதியில் தற்போது மாநில அமைச்சராகவுள்ள நமச்சிவாயம் மக்களவை பாஜக வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். நாமக்கல் தொகுதி வேட்பாளராகக் களமிறக்கப்பட்டிருக்கும் கே.பி.ராமலிங்கம். தேர்தலில் போட்டியிட விருப்பமில்லை. ஆனால், கட்சி கட்டாயப்படுத்தியதால் போட்டியிடுகிறேன் என்கிறார்.

இப்படி தமிழகத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்வில் பெரும் சறுக்கலைச் சந்தித்துள்ளது பாஜக. அதேபோல், மாநிலத்தில் ஒரு எம்எல்ஏ, எம்.பி சீட் இல்லாத தமிழ் மாநில காங்கிரஸுக்கு 3 இடங்களை வாரி வழங்கியுள்ளது பாஜக.

ஒரு தொகுதிதான் கேட்டேன். ஆனால், பாஜக இரண்டு தொகுதிகளை தனக்கு ஒதுக்கியதாக டி.டி.வி.தினகரன் கூறியுள்ளார். இப்படியாக, 39 தொகுதிக்கு வேட்பாளர்களை நிறுத்துவதில் பாஜக கடும் தடுமாற்றத்திற்கு உள்ளாகி இருக்கிறது என்பது மட்டும் தெளிவாகிறது.

வேட்பாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தால் எம்எல்ஏக்கள், ஆளுநராக பதவி வகித்தவர்கள், மத்திய, மாநில அமைச்சர்களைக் களமிறக்கியிருக்கின்றனர் என்பதையும் பார்க்க முடியும்

இரவு இரண்டு மணிக்கு பாஜகவில் ஐக்கியமான நடிகர் சரத்குமாரின் துணைவியரான ராதிகாவிற்கு விருதுநகர் ஒதுக்கப்பட்டுள்ளது. எப்படியாவது நாடாளுமன்ற தொகுதியை வாங்கி விட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியிலிருந்து கட்சி மாறிய விஜயதாரணிக்கு எந்த வாய்ப்பும் அளிக்கப்படவில்லை. அதுபோலவே நடிகை குஷ்புவிற்கும் எந்த தொகுதியும் வழங்கப்படவில்லை.

### சாதிவாரி வேட்பாளர்கள்

பாஜக அதன் அணிசேர்க்கை, சாதிய சக்திகளாகவே காட்சியளிக்கிறது. வட தமிழ்நாட்டில் வன்னியர் மக்களை இழுக்க பாட்டாளி மக்கள் கட்சி, உடையார்கள் சமூகத்தை இழுக்க ஐ.ஜே.கே., முதலியார்கள் பெயரால் சாதி கட்சி நடத்தும் ஏ.சி.சண்முகம், தென் மாவட்டங்களில் தேவேந்திரகுல வேளாளர்களை வளைக்க ஜான் பாண்டியன், யாதவர் வாக்குகளை பெற சிவகங்கையில் தேவநாதன், முக்குலத்தோர் வாக்கு வங்கியை நம்பி முன்னாள் முதல்வர் ஓபிஎஸ், டிடிவி தினகரன், நயினார் நாகேந்திரன் என்று சாதி அணி சேர்க்கைக்கு தான் தமிழ்நாட்டின் பாஜக முயன்று உள்ளது, தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

திருவள்ளூரில் போட்டியிடும் வி.பாலகணபதி, அதிமுகவில் இருந்து பாஜகவில் இணைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகலா புஷ்பாவிடம் பொதுவெளியில் இவர் நடந்து கொண்ட விதம் ஒட்டுமொத்த தமிழகத்தையே முகம் சுழிக்க வைத்தது. எப்படி இருந்தால் என்ன? அவர்தான் எங்களுக்கான பிரபலமான வேட்பாளர் என்று களத்தில் இறக்கி இருக்கிறது பாஜக!

தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினராக போட்டியிடும் கருப்பு என்கிற எம்.முருகானந்தம் மீது கொலை வழக்கு உட்பட 30க்கும் மேற்பட்ட கிரிமினல் வழக்குகள் உள்ளன. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தான் அவரும் களம் இறக்கப்பட்டுள்ளார்

மொத்தத்தில் பாஜகவின் பிரச்சார உத்தி எவரையும் ஆட்கொள்ளவில்லை. பிரதமர் மோடி ஐந்து முறை தமிழ்நாட்டில் பிரச்சாரம் செய்ய வருகிறாராம். இயற்கை பேரிடர் காலங்களில், பெரும் மழைக் காலங்களில் வராத பிரதமர், இப்போது வாக்கு அறுவடைக்கு மட்டும் வருகிறார் என்றால்? இதுதான் பாஜக நெஞ்சத்தில் வஞ்சம் கலந்த கூடா நட்பு, பாடாய் படுத்தும் பாஜக என்பதை காலம் நிச்சயம் உணர்த்தும்! நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி வாகை சூடும் !

தொடர்புக்கு: 9444481703

## யார் இந்த கார்த்தியாயினி?



கடந்த 2014 ம் ஆண்டு சொத்துக்குவிப்பு வழக்கில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு, நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது, பெங்களூரு தனி நீதிமன்றம். அந்தத் தீர்ப்பு வெளியானபோது, தனி நீதிமன்ற நீதிபதி குன்ஹா அளவுக்குப் பரபரப்பாகப் பேசப்பட்ட மற்றொருவர் கார்த்தியாயினி.

வேலூர் மாநகராட்சியின் முன்னாள் மேயரான இவர், அப்போது குன்ஹாவையும், அவரது தீர்ப்பையும் விமர்சித்தும், எதிர்த்தும் மாநகராட்சியில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியவர்தான் இந்த கார்த்தியாயினி.

இந்தத் தீர்மானம், நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என கடும் கண்டனங்கள் எழுந்தன. அதையடுத்து சென்னை உயர் நீதிமன்றத்திலும், கர்நாடக நீதிமன்றத்திலும் அவர்மீது வழக்கு தொடரப்பட்டதை அடுத்து, பகிரங்க மன்னிப்பைக் கேட்க வேண்டும் என்று கார்த்தியாயினி தலையில் குட்டுவைத்தது நீதிமன்றம். பின்னர் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார் கார்த்தியாயினி. அ.தி.மு.கவின் அதிதீவிர விசுவாசியாகத் தன்னைக் காட்டிக்கொண்டனர். ஜெயலலிதா மறைந்த ஒருசில மாதங்களிலேயே, பா.ஜ.கவில் ஐக்கியமானார். இன்று இந்த பிரபலத்திற்காக தான் அவருக்கு சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியில் வாய்ப்பு வழங்கப்பட்டு தோழர் தொல் திருமாவை எதிர்த்து களம் காண்கிறார் இதுதான் பாஜக!

## மனைவியைக் கொன்றவர் பாஜக வின் வேட்பாளர்!



திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி பாஜக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள ஏ.பி. முருகானந்தம் மீது, 2015 ல் அவரது முதல் மனைவி ஞானசுந்தரியை கொடுமைப்படுத்தி, கொலை செய்ததாக பதியப்பட்ட வழக்கு (வழக்கு எண் 527 / 2015) இன்னும் நிலுவையில் உள்ளது. ஞான சுந்தரி முனைவர் பட்டம் முடித்துவிட்டு, ஒரு தனியார் கல்லூரியில் பேராசிரியராக பணியில் இருந்தவர். முருகானந்தத்திற்கும் , ஞானசுந்தரிக்ம் குழந்தைகள் இல்லை. அதை காரணம் காட்டி தினம் தினம் அடித்து கொடுமை செய்துள்ளார்கள் முருகானந்தமும், அவரது பெற்றோர்களும்.

உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் மிகவும் கொடுமைப்படுத்தி வந்துள்ளனர். இதற்கிடையே முருகானந்தத்திற்கு பிரியா என்ற பெண்ணுடன் திருமணத்திற்கு மீறிய உறவு இருந்துள்ளது. இது ஞானசுந்தரிக்கு தெரியவர பிரச்சனை பெரியதாகியுள்ளது . இந்நிலையில் தீடீரென 11.3.2015 அன்று ஞானசுந்தரி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக முருகானந்தமும், அவரது பெற்றோரும் கூறியுள்ளனர். ஆனால் ஞானசுந்தரியின் தந்தை இதை முற்றிலும் மறுத்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அவ்வழக்கை விசாரித்த அதிகாரிகள் ஞானசுந்தரி மர்மமான முறையில் உயிரிழந்ததாக வழக்கு பதிவு செய்துள்ளனர்.

அப்பகுதி மக்கள் கூறுவது “சொத்துக்காகவும், மற்றொரு பெண்ணுடன் இருந்த தொடர்பு ஞானசுந்தரிக்கு தெரியவந்ததாலும், முருகானந்தமே அவரது மனைவியை அடித்து கொன்று தூக்கில் தொங்கவிட்டுவிட்டு தற்கொலை செய்து கொண்டதாக வெளியில் நாடகமாடி உள்ளார், மேற்கொண்டு வழக்கு விசாரணையை தனக்கு பாஜகவில் இருக்கும் செல்வாக்கை வைத்து முடக்கி உள்ளார் என தெரிவிக்கின்றனர். தற்போது பிரியா என்ற பெண்ணுடன் முருகானந்தம் வாழ்ந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**விவசாய விளைநிலங்களை கார்ப்பரேட்டுகளுக்கு தாரைவார்த்த, விவசாய விரோதச் சட்டங்களை நிறைவேற்றிய வீணர்களை விரட்டி அடிப்போம்!**


## திமுக கூட்டணிக்கு ஆதரவு அதிகரிக்கிறது



தமிழகத்தில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு பல்வேறு அரசியல் அமைப்புகளின் ஆதரவு அதிகரித்து வருகிறது.

1. யாதவ மக்கள் இயக்கம். கு ராஜாராம்.
2. இந்திய தேசிய லீக் பஷீர் அகமது.
3. மூவேந்தர் முன்னேற்ற கழகம் ஸ்ரீதர் வாண்டையார்.
4. முக்குலத்தோர் புலிப்படை. நடிகர் கருணாஸ்.
5. ஆதித்தமிழர் கட்சி கு. ஜக்கையன்.
6. தேவேந்திர குல மக்கள் முன்னேற்ற பேரவை எஸ் ஆர் பாண்டியன்.
7. அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகம் பொன் முருகேசன்.
8. திராவிட தமிழர் கட்சி பேரறிவாளன்.
9. தமிழ் மாநில தேசிய லீக் திருப்பூர் அல்டாப்.
10. இந்திய தேசிய எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர்ஸ் நிலம் தரகர்கள் சங்கம் விருகை வி. என். கண்ணன்.

## வருண் காந்தி பாஜகவிலிருந்து வெளியேறுகிறார்?



முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் மகனான சஞ்சய் காந்தியின் மனைவி மேனகா காந்தி, குடும்பப் பிரச்சனை காரணமாக பாஜகவில் அங்கம் வகிக்கும் நிலையில், அவரது மகன் வருண் காந்தியும் பாஜக எம்பியாக உள்ளார். மேனகா காந்தி பாஜகவிடம் உறவாடி ஒன்றிய அமைச்சர் பதவியை பெற்றார். ஆனால் வருண் காந்தி மோடி அரசின் மக்கள் விரோத கொள்கையை தனது குற்றச்சாட்டு மூலமாக போட்டுடைத்தார்.

இந்நிலையில், வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் மேனகா காந்திக்கு பாஜக மீண்டும் சீட் (சுல்தான்பூர்) வழங்கி யது. ஆனால் மூன்று முறை எம்பியான வருண் காந்திக்கு சீட் மறுக்கப்பட்டுள்ளது. வருண் காந்தி தற்போது எம்பியாக உள்ள பிலிபிட் தொகுதியில் முன்னாள் காங்கிரஸ்காரரான உத்தரப்பிரதேச மாநில அமைச்சர் ஜிதின் பிரசாதாவுக்கு பாஜக சீட் வழங்கியுள்ளது.

பிரதமர் மோடிக்கு எதிராக பேசியதன் காரணமாகவே வருண் காந்திக்கு சீட் மறுக்கப்பட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. இதனால் அவர் அதிருப்தி அடைந்துள்ள தாகவும், விரைவில் பாஜகவை விட்டு வெளியேற உள்ளதாகவும் தகவல் வெளி யாகியுள்ளது. பாஜகவின் எதிர்விளைவுகளை சந்திக்க வருண் தயார் வருகிறார்.

## ஏழே ஆண்டில் 50 ஆயிரம் கோடி 11.5 லட்சம் கோடியானது

2014இல் அதானிஜி, மோடிஜியின் சொத்து 50,000 கோடி. 7 ஆண்டுகளுக்குப் பிறகு, அவரது சொத்து 11.5 லட்சம் கோடியாக மாறியது. இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு எங்கு செல்வீர்கள்? 11.5 லட்சம் கோடி மதிப்புள்ள சொத்து. 7 வருடங்களில் உங்கள் நாட்டை இவ்வளவு கொள்ளையடித்து விட்டீர்களே! 2014 இல், 609 ஆவது இடத்தில் இருந்த அவர், தற்போது இரண்டாவது பெரிய பணக்காரராக மாறியுள்ளார். இப்போது அவர் முதல் பணக்காரர் ஆக விரும்புகிறார். மோடிஜியின் இந்திய வளர்ச்சி இதுதான்.






## சின்னதா ஒரு தேர்தல் கணக்கு



2024 தேர்தல்..
சின்னதா ஒரு கணக்கு போடலாமா..
39 தமிழ்நாடு
1 பாண்டிச்சேரி
20 கேரளா
28 கர்நாடக
25 ஆந்திரா
17 தெலுங்கானா
21 ஒரிசா
தென்மாநிலம் மொத்தம் 151 சீட்டு (பழைய மெட்ராஸ் பிரசிடண்சி) இதில் பாஜக எத்தனை தேரும்?
அதிகபட்சம் 20 முதல் 30 பெறும்.
இந்தியா கூட்டணிக்கு 121 முதல் 131 பெறும்.
14 அசாம்
2 அருணாசலபிரதேசம்
2 மணிப்பூர்
1 சிக்கிம்
1 நாகாலேண்டு
1 மிசோரம்
2 திரிப்புரா
2 மேகாலயா
வடகிழக்கு மாநிலங்களில் மொத்தம் 25 சீட்டு இதில் பாஜக எத்தனை தேரும்?
அதிகபட்சம் 4 முதல் 5 சீட்டு பெறும்.
இந்தியா கூட்டணிக்கு 20 முதல் 21 பெறும்.
13 பஞ்சாப்
10 ஹரியானா
7 டெல்லி
மொத்தம் 30 சீட்டு இதில் பாஜக எத்தனை தேரும்?
அதிகபட்சம் 5 முதல் 10 சீட்டு பெறும்.
இந்தியா கூட்டணிக்கு 20 முதல் 25 பெரும்.
48 மஹாராஸ்டா
40 பீகார்
42 மேற்குவங்கம்
மொத்தம் 130 சீட்டு இதில் பாஜக எத்தனை தேறும்?
அதிகபட்சம் 30 முதல் 50 சீட்டு பெறும்.
இந்தியா கூட்டணிக்கு 80 முதல் 100 சீட்டு பெறும்.
80 உத்திரபிரதேசம்
29 மத்தியபிரதேசம்
25 ராஜஸ்தான்
26 குஜராத்
மொத்தம் 160 சீட்டு இதில் பாஜக எத்தனை தேரும்?
அதிகபட்சம் 100 முதல் 120 சீட்டு பெறும்.
இந்தியா கூட்டணிகு 60 முதல் 80 சீட்டு பெறும்.
11 சட்டிஸ்கர்
14 ஜார்கண்ட்
5 உத்திகாண்ட்
4 ஹிமாசல்பிரதேசம்
6 ஜம்மு காஷ்மீர்
மொத்தம் 40 சீட்டு இதில் பாஜக எத்தனை தேரும்?
அதிகபட்சம் 15 முதல் 19 சீட்டு பெறும்.
இந்தியா கூட்டணிக்கு 21 முதல் 25 சீட்டு பெறும்.
கோவா மற்றும் யுனியன் பிரதேசங்கள் டெல்லி மற்றும் பாண்டிச்சேரி தவித்து 7 சீட்டு.
இதில் பாஜக எத்தனை தேரும்?
அதிகபட்சம் 4 முதல் 5 சீட்டு பெறும்.
இந்தியா கூட்டணிக்கு 2 முதல் 3 சீட்டு பெறும்.
இதில் பாஜக கூட்டணி மொத்தம் 178 முதல் 239 வரை மட்டுமே வெற்றி பெறும்.
இதில் இந்தியா கூட்டணி மொத்தம் 324 முதல் 385 வரை வெற்றி பெறும்.
கூட்டி கழிச்சு பாரு கணக்கு சரியா வரும்..

நன்றி
திரு.தராசு ஷியாம்

## சங்கிகளின் சரிவு தொடங்கிவிட்டது




டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக (JNU), மாணவர் சங்கத்தின் நான்கு பதவிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. நான்கு இடங்களிலும் இடதுசாரி மாணவர் அமைப்புகள் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளன. பாஜக மாணவர் அமைப்பான ஏபிவிபி நான்கிலும் படுதோல்வி அடைந்துள்ளது.

ஒன்றிய ஆட்சிக்கு பாஜக வந்தவுடன், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர்கள் மீது பல்வேறு இட்டுக்கட்டிய தேசத் துரோக புகார்களை கூறி கைது செய்தனர். சிறைக்குள் அடைத்தனர். ஏபிவிபி குண்டர்கள் மூலம் இடதுசாரி மாணவர் தலைவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தினர்.

அடுத்து, துணைவேந்தராகவும் பதிவாளராகவும் சங்கிகளை தேர்வு செய்து நியமனம் செய்தனர். மாணவர் அமைப்புகளின் செயல்பாடுகளை முடக்கினர். மாணவர் சங்கத்தின் (JNUSU) தேர்தலை நடத்தாமல் நிறுத்தி வைத்தனர். இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து மாணவர் சங்கத்தின் தேர்தல் நடைபெற்றது. வாக்குகள் எண்ணப்பட்டு நேற்றிரவு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அனைத்து இடங்களிலும் இடதுசாரிகள் வெற்றி பெற்றுள்ளனர். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் சங்கிகளின் சரிவை தொடங்கி வைத்துள்ளனர்.

மாணவர் சங்கத்தின்

**தலைவர்**
தனஞ்சய் AISA (இடது) 2973
உமேஷ் சந்திர அஜ்மீரா (ஏபிவிபி) 2039

**துணைத் தலைவர்**
அவிஜித் SFI (இடது) 2649
தீபிகா சர்மா (ஏபிவிபி) 1778

**பொதுச்செயலாளர்**
பிரியன்ஷி (பாப்சா, இடது ஆதரவு) 3307
அர்ஜுன் ஆனந்த் (ஏபிவிபி) 2309

**இணைச் செயலாளர்**
சஜித் AISF (இடது) 2893
கோவிந்த் டாங்கி (ஏபிவிபி) 2496

## ஏக்நாத் ஷிண்டேவை ஒழிக்க துடிக்கிறது பாஜக



மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 2022இல் காங்கிரஸ் தேசியவாத காங்கிரஸ் சிவசேனா ஆகிய கட்சிகளின் எம்விஏ கூட்டணி ஆட்சியை ஏக்நாத் ஷிண்டே மூலம் கவிழ்த்தது பாஜக. ஆட்சியை கவிழ்த்தது மட்டுமல்லாமல் 39 எம்எல்ஏக்களை வளைத்து ஏக்நாத் ஷிண்டே சிவசேனாவையும் இரண்டாக உடைத்தார். தற்போது பாஜக கூட்டணி ஆட்சியில் மகாராஷ்டிரா முதல்வராக ஏக்நாத் ஷிண்டே உள்ள நிலையில், கட்சியின் பெயரையும் (சிவசேனா) மற்றும் சின்னத்தையும் (வில் அம்பு) மோடி அரசு மூலம் தேர்தல் ஆணையத்தி டம் பெற்றார்.

இந்நிலையில், கட்சியின் பெயர், சின்னம், எம்எல்ஏ, எம்பிக்களை இழுத்து சிவசேனாவை ஷிண்டே கைப்பற்றினாலும், பிராந்திய தலைவர்கள், தொண்டர்கள், மக்கள் ஆதரவு என அனைத்தும் உத்தவ் தாக்கரே பக்கமே உள்ளது. இதனால் பால் தாக்கரேவின் மருமகனும், நவநிர்மாண் சேனா தலைவருமான ராஜ் தாக்கரேவை தங்கள் பக்கம் இழுத்துள்ளது. இந்நிலையில், சிவசேனாவை நவநிர் மாண் சேனா கட்சியுடன் இணைக்கவும் பாஜக உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. உடைப்பு, பிளப்பு பாஜக வுக்கு கைவந்த கலை.

**உழைப்பவர்களுக்கு உரிமை கொடுக்கும் நாடா?**
**கார்ப்பரேட்டுகள் தடையின்றி கொள்ளை அடிக்கும் காடா?**

**தேர்தல் 2024**

## நச்சுன்னு நாலு பதில்

1. தேர்தல் நேரத்தில் கட்சி தாவுவதற்கும், தேர்தல் வெற்றிக்குப் பின் கட்சி தாவுவதற்கும் என்ன வித்தியாசம்.



இரண்டுமே குதிரை பேரம்தான்! என்ன வித்தியாசம்? பேரத்தின் விலை தான் வித்தியாசம். தேர்தல் வெற்றிக்குப் பின்பு விலை அதிகம்.

2. நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் ஈடி குறித்து பரபரப்பாகப் பேசப்படுகிறதே?



* எங்கள் கட்சியில் சேருங்கள்!

மீறினால் ஈடி பாயும்!

* இந்தியா கூட்டணியோடு சேரக்கூடாது!

மீறினால் ஈடி பாயும்!

* இருக்கும் கட்சியை விட்டு வெளியேறு!

இல்லையென்றால் இடி பாயும்!

* கூட்டாளிகளோடு பாஜகவில் சேர்ந்து விடு!

இல்லையேல் ஈடி பாயும்!



* தேர்தல் நிதிக்காக பாஜக கேட்கும் பணத்தை கொடு!

இல்லையேல் ஈடி பாயும்!

பாஜக அகராதியில் சர்வதிகாரத்தின் இன்னொரு பெயர்தான் ஈடி!

3. அதிமுக பாமக கூட்டணிப் பேச்சுவார்த்தை முறந்து விட்டதே!

கூட்டணிப் பேச்சுவார்த்தைக்காக கதவை அகலத் திறந்து வைத்தார்கள். நுழைவதற்கு யாரும் வரவில்லை! தேடிச் சென்று அதாவது கடைக்கு வெளியே பேசினார்கள்.

மிரட்டல், பேரம், பதவி என்று பாஜக விரித்த வலையில் பாமக விழுந்து விட்டது.

4. தமிழ்நாட்டில் கடந்த தேர்தலை விட பாஜக அதிக வாக்குகள் பெருமா?


அதிமுக கூட்டணி இல்லாத பாஜக! எனவே இந்தக் கேள்விக்கே அவசியம் இல்லை. அண்ணாமலையும், ஆளுநர் ரவியும் பாஜகவை பின்னுக்கு இழுத்துச் சென்று விடுவார்கள்!

## குஜராத்திலும் பாஜக காலியானது



நாடு முழுவதும் மோடி மற்றும் பாஜகவிற்கு எதிரான அலை வேகம் எடுத்துள்ளது.இதனை உணர்ந்துள்ள பாஜக வேட்பாளர்கள் தங்களுக்கு சீட் வேண்டாம் என்று ஒட்டம் பிடித்து வருகின்றனர். குஜராத்தின் வடக்கு பகுதியான சபர்கந்தா மக்களவைத் தொகுதியின் பாஜக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பிகாஜி தாகூர் தனக்கு சீட் வேண்டாம் என அறிவித்தார்

இந்த நிலையில் சபர்கந்தா மக்களவைத் தொகுதியில் பாஜகவை சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் என நூற்றுக்கணக்கானோர் காங்கிரஸ் கட்சியில் இணைந்தனர். இவர்களைப் போல பிகாஜி தாகூரும் விரைவில் காங்கிரஸ் கட்சியில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இரண்டு நாட்கள இடைவெளியில் தெற்கு பெங்களூர், வடக்கு குஜராத் ஆகிய இரண்டு மக்களவைத் தொகுதியில் முக்கிய நிர்வாகிகள், தொண்டர்கள் கட்சியை விட்டு வெளியேறி வருவதால் பாஜக அதிர்ச்சியில் உறைந்துள்ளது.



காமராஜர், காமராஜர் என்று இன்றைக்குப் பேசி வரும் ஆர்.எஸ். எஸ் சங்கிகள் தான், 1966 ஆம் ஆண்டு காமராஜரை கொலை செய்ய முயன்று அவர் வசித்த டெல்லி வீட்டுக்கு தீவைத்தனர்.

## பாஜக ஆட்சியில் அதானி, அம்பானி மட்டுமே மகிழ்ச்சியாக உள்ளனர்

**சி.வி.சண்முகம் சாடல்**

திண்டிவனத்தில் நடைபெற்ற கூட்டத்தில், அதிமுக முன்னணி தலைவரும், முன்னாள் அமைச்சருமான சி.வி. சண்முகம் ஒன்றிய அரசை சாடியுள்ளார்.



“நாட்டில் யாரும் மகிழ்ச்சியாக இல்லை. பிரதமர் மோடி மூன்று வேளைக்கு ஆறுமுறை ஆடை மாற்றி மகிழ்ச்சியாக இருக்கிறார். அவரின் இரண்டு நண்பர்கள் அதானி யும், அம்பானியும் மகிழ்ச்சியாக உள்ளனர்.

ரூ. 400க்கு இருந்த சிலிண்டர் ரூ. 1,200 க்கு உயர்ந்த தற்கும், பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு காரணமும் மோடிதான். காலியாக இருக்கும் 13 லட்சம் ஒன்றிய அரசு பணியிடங்களை இன்னும் நிரப்பவில்லை.

கடந்த 10 ஆண்டுகளில் 1,000 தமிழர்களுக்குகூட ஒன்றிய அரசுப் பணி வழங்கவில்லை. நெய்வேலியில் கடந்தாண்டு சேர்க்கப்பட்ட 1,000 பொறியாளர்களில் ஒருவர்கூட தமிழர் இல்லை.

தமிழகம் வரும் போதெல்லாம் தமிழை தொன்மை மொழி என்று பேசுவார். திருக்குறளும் சொல்வார். ஆனால், அதே திருக்குறளை, மோடி தேசிய நூலாக ஏன், அறிவிக்கவில்லை. ஏனென்றால் எல்லாம் வாக்குக்கான நடிப்பு மற்றும் நாடகம்” என்று விமர்சித்துள்ளார்.

எடப்பாடிக்கு முதுகெலும்பு இல்லை போலும்.

## வெறுப்பு அரசியலால் விலகல்

**சிரோமணி அகாலிதளம் தனித்து போட்டி**



13 மக்களவை தொகுதியை கொண்ட பஞ்சாப் மாநிலத்தில் சிரோமணி அகாலிதளத்துடன் கூட்டணி அமைத்து போட்டியிட தயாரானது பாஜக. சிரோ மணி அகாலிதளத்திற்கு 8 தொகுதி யும், பாஜகவிற்கு 5 தொகுதி என கூட்டணி ஒப்பந்தம் முடிவடைய விருந்த நேரத்தில் மீண்டும் விவ சாயிகள் போராட்டம் தலைதூக்கி யது. விவசாய போராட்டத்திற்கு பிறகு சிரோமணி அகாலிதளம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது.

இனிமேல் பாஜகவிடம் கூட்டணி சேர்ந்தால், பஞ் சாப் மக்கள் தங்களை அடித்து துரத்தி விடுவார்கள் என சுதாரித்துக்கொண்டது.

வரவிருக்கும் மக்களவை தேர்தலில் பாஜக கூட்டணி இல்லை என்றும், தனித்து போட்டியிடப் போவதாக சிரோமணி அகாலிதளம் கட்சி அறிவிக்க உள்ள தாக தகவல் வெளியாகியது. சிரோமணி அகாலிதளம் அறிக்கை வெளியிட்டால் அவமான ஆகிவிடும் என உணர்ந்த பாஜக முந்திக்கொண்டு, தனித்துப் போட்டி யிடுவதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. அதாவது சிரோமணி அகாலிதளம் கூட்டணியில் இருந்து வெளி யேற்றியதை மறைக்க தொகுதி உடன்பாடு ஏற்படவில்லை என்று பிரச்சனையை திசை திருப்பியுள்ளது.

ஏற்கனவே ஒடிசாவில் ஆளும் பிஜு ஜனதாதளம் பாஜகவுடன் கூட்டணி வேண்டாம் என்று விலகிய நிலையில், தற்போது பஞ்சாப்பி லும் அதே நிலை ஏற்பட்டுள்ளதால் பாஜக கதிகலங்கி போயுள்ளது.

## தகரப் பெட்டி அண்ணாமலை அளந்து விட்ட தடாலடி பொய்!



எங்கப்பா வேட்டி கட்டிகிட்டு கிராமத்தில் இருந்து 2 தகர டப்பாவை எடுத்துகிட்டு 3 பேருந்து மாறி 2002ல் கோவைக்கு வந்தேன் என்று பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். ஆனால். கடந்த முறை அரவக்குறிச்சி தொகுதி சட்டமன்றத் தேர்தலில் அவர் தாக்கல் செய்த வேட்புமனுவில் காட்டப்பட்ட அசையும் சொத்தின் மொத்த மதிப்பு 46 லட்சம் ரூபாய், தன்னுடைய மனைவியின் அசையும் சொத்து மதிப்பு 94 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளார். அசையா சொத்துக்களாக பூர்வீகமா 1 கோடி மதிப்புள்ள 76 ஏக்கர் நிலம் உட்பட பல நிலங்களை பட்டியலிட்டு உள்ளார்.

இவ்வளவு சொத்துக்கள் இருந்தபோதும் தன்னை ஏழை போல சித்தரித்து பேண்ட் போட்டுகிட்டு எங்கப்பா வேட்டி கட்டிகிட்டு கிராமத்தில் இருந்து 2 தகர டப்பாவை எடுத்துகிட்டு 3 பேருந்து மாறி 2002ல் கோவைக்கு வந்தேன் என்று பாஜக தலைவர் அண்ணாமலை கூறியது எவ்வளவு பெரிய வடிகட்டிய பொய்!

## வினாடி - வினா



1. மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மிக இளம் வயது உறுப்பினர் பெயர் என்ன?

2. இந்தியாவில் பிரதமராகப் பதவியேற்ற மிக மூத்த வயது தலைவர் யார்?

3. இந்தியாவில் பிரதமராகப் பதவியேற்ற மிக இளவயது தலைவர் யார்?

4. இந்திய பிரதமராக மிக அதிக காலம் பணியாற்றியவரின் பெயர் என்ன?

5. வாக்களிப்பதற்கு தகுதியான வயது 18 ஆக குறைக்கப்பட்டது எப்போது?

6. புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் எப்போது வெளி யிடப்பட்டது?

**விடைகள்**
**12 ஆம் பக்கம்**


## இண்டியா கூட்டணிக்கு இந்திய தவ்ஹீத் ஜமாஅத் ஆதரவு



வரும் மக்களவைத் தேர்தலில் திமுக தலைமையிலான இண்டியா கூட்டணிக்கு இந்திய தவ்ஹீத் ஜமா அத் ஆதரவு தெரிவித்துள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் 10 ஆண்டு செயல்பாடுகள் இந்திய தேசத்தின் பன்முகத்தன்மையை சிதைத்து வருகிறது. எனவே, இந்திய தவ்ஹீத் ஜமா அத்ன் கிளை, மாவட்ட, மாநில மற்றும் அணிகள் ஆகியோரின் ஆலோசனையின் அடிப்படையில், இந்திய தவ்ஹீத் ஜமா அத், வரும் மக்களவைத் தேர்தலில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான, திமுக தலைமை வசிக்கும் இண்டியா கூட்டணிக்கு ஆதரவு தெரி விப்பது என்று முடிவெடுத்துள்ளது. தமிழக மக்கள் 40 தொகுதிகளிலும் இண்டியா கூட்டணி வேட்பாளர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து இந்தியாவை காப்பாற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

**◆ பத்தாண்டு பாஜக ஆட்சியில் மக்களுக்கு செருப்படி!**
**◆ வாக்கு கேட்கும் போது மட்டும் கருப்பட்டியா?**



# மக்களவைத் தேர்தலுக்கு திமுக அளித்துள்ள முக்கியமான 36 வாக்குறுதிகள்

18 ஆவது மக்களவைத் தேர்தலுக்கு திமுக 64 பக்கங்கள் கொண்ட வாக்குறுதிகள் அடங்கிய அறிக்கையை புதனன்று வெளியிட்டது. முதல்வர் ஸ்டாலின் இதனை வெளியிட்டார். இதில் இடம் பெற்றுள்ள முக்கிய வாக்குறுதிகள் வருமாறு:

1. மாநிலங்கள் உண்மையான சுயாட்சி பெறும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும்.
2. ஆளுநர் பதவி தேவையில்லை என்றாலும், அப்பதவி இருக்கும் வரையில் மாநில முதலமைச்சர்களின் ஆலோசனை பெற்றே ஆளுநர்கள் நியமிக்கப்பட வழிவகை செய்யப்படும். ஆளுநர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கும் பிரிவு 361 நீக்கப்படும்.
3. உச்சநீதிமன்றத்தின் கிளை சென்னையில் அமைக்கப்படும்.
4. புதுச்சேரிக்கு மாநிலத் தகுதி வழங்கப்படும்.
5. ஒன்றிய அரசுப் பணிகளுக்கு தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகியவை நடத்தப்படும்.
6. ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழ் பயன்படுத்தப்படும்
7. அனைத்து மாநில மொழிகளது வளர்ச்சிக்கும் சம அளவு நிதி வழங்கப்படும்.
8. திருக்குறள் தேசிய நூலாக அறிவிக்கப்படும்.
9. தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழருக்கு, இந்தியக் குடியுரிமை வழங்கப்படும்.
10. ரயில்வே துறைக்கு தனி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.
11. புதிய கல்விக் கொள்கை ரத்து செய்யப்படும்.
12. நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் பெண்களுக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீடு உடனடியாக அமல்படுத்தப்படும்.
13. நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.
14. இந்தியா முழுவதும் உள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் மகளிர் உரிமைத் தொகையாக ரூ. 1000/ வழங்கப்படும்.
15. தமிழ்நாட்டிற்கு ‘நீட்’ தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.
16. மாநில முதலமைச்சர்களைக் கொண்ட மாநில வளர்ச்சிக்கு குழு அமைக்கப்படும்.
17. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 10 லட்சம் ரூபாய் வட்டியில்லா கடன் வழங்கப்படும்.
18. பாஜக அரசின் தொழிலாளர் நல விரோதச் சட்டங்கள் மறு சீரமைப்பு செய்யப்படும்.
19. தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.
20. வங்கிகளில் குறைந்த பட்ச இருப்புத் தொகை இல்லாத போது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்.
21. குடியுரிமை திருத்தச் சட்டம்2019 ரத்து செய்யப்படும்.
22. ஒன்றிய அரசு அளவில் சாதி வாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும்.
23. ஜிஎஸ்டி சட்டத்தில் சீர்திருத்தம் கொண்டு வரப்படும்.
24. வேளாண் விளைபொருட்களுக்கு மொத்த உற்பத்திச் செலவு + 50 சதவிகிதம் என்பதை வலியுறுத்தி விவசாயிகளுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் (விஷிறி) செய்யப்படும்.
25. இந்தியா முழுவதும் மாணவர்கள் பெற்ற கல்விக்கடன்களைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
26. விமானக் கட்டணம் நிர்ணயிப்பது முறைப்படுத்தப்படும்.
27. எல்பிஜி சிலிண்டர் விலை ரூ. 500, பெட்ரோல் விலை ரூ. 75 மற்றும் டீசல் விலை ரூ. 65ஆக குறைக்கப்படும்.
28. பொது சிவில் சட்டம் கொண்டு வரப்படாது.
29. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100இல் இருந்து 150ஆகவும், ஊதியம் ரூ. 400ஆகவும் உயர்த்தப்படும்.
30. ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களான IIT, IIM, IISc, IIARI ஆகியவை தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்படும்.
31. பாஜக அரசால் கொண்டு வரப்பட்ட மக்கள் விரோத சட்டங்கள் அனைத்தும் மறுபரிசீலனை செய்யப்படும்.
32. ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கைவிடப்படும்.
33. மாணவர்களுக்கு வட்டியில்லாத கல்விக் கடனாக 4 லட்சம் வரை வழங்கப்படும்.
34. ரயில்வே துறையில் வழங்கப்பட்டு வந்த கட்டணச் சலுகைகள் மீண்டும் வழங்கப்படும்.
35. இஸ்லாமியர் மற்றும் இதர சிறுபான்மையினர் மேம்பாடு குறித்து ஆராய்ந்த சச்சார் கமிட்டி பரிந்துரைகள் செயல்படுத்தப்படும்.
36. சென்னையில் மூன்றாவது ரயில் முனையம் அமைக்கப்படும்.

# “இந்தியா” கூட்டணியில் மணிப்பூர் ஐக்கிய ஜனதா தளம்




நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதாதளம் கட்சி கடந்த ஜனவரி மாதம் பீகாரின் “மகா” மற்றும் “இந்தியா” கூட்டணியில் இருந்து விலகி மீண்டும் பாஜக கூட்டணியில் சேர்ந்தது. இவரது பச்சோந்தி அரசியலால் சொந்த கட்சிக்குள்ளேயே கடும் அதிருப்தி நிலவிய நிலையில், மணிப்பூரில் ஐக்கிய ஜனதாதளம் தனியாக பிரிந்து சென்று, “இந்தியா” கூட்டணிக்கு ஆதரவாக களமிறங்கியுள்ளது.

தொகுதி பங்கீடு தொடர்பாக மணிப்பூர் மாநிலத்தின் ‘இந்தியா’ கூட்டணி கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் காங்கிரஸ், இடதுசாரிகள், தேசியவாத காங்கிரஸ் (சரத்), திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக், சிவசேனா (உத்தவ்) புரட்சிகர சோசலிஸ்ட் ஆகிய கட்சிகள் பங்கேற்ற நிலையில், ஐக்கிய ஜனதா தளத்தின் மணிப்பூர் பிரிவும் ‘இந்தியா’ கூட்டணி கூட்டத்தில் பங்கேற்று உள்ளது. இந்த விவகாரத்தால் நிதிஷ்குமார் கடும் அதிர்ச்சியில் உறைந்துள்ளார். தன் வினை தன்னைச் சுடும்.

# பாஜக – பிஜு ஜனதாதளம் கூட்டணி முயற்சி தோல்வி



“இந்தியா” கூட்டணி எழுச்சியால் தோல்வி பயத்தில் உள்ள பாஜக, ஒடிஷா மாநிலத்தில் அமலாக்கத்துறை மிரட்டல் மூலம் ஆளும் பிஜு ஜனதாதளத்தை தேசிய ஜன நாயக கூட்டணிக்கு இழுக்க முயற்சித்தது. பாஜக பிஜு ஜனதாதளம் கட்சிகள் கடந்த 10 நாட்களாக மக்களவை மற்றும் சட்டமன்ற தேர்தலுக்கான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்தன.

இந்நிலையில், தொகுதி பங்கீடு மற்றும் பாஜகவின் ஆதிக்கம் எங்கள் கட்சிக்கு ஒத்துவராது எனக் கூறியும், பாஜகவுடன் கூட்டணி அமைக்க வாய்ப்பில்லை என்றும் பிஜுஜனதாதளம் அறிவித்தது. இதனால் ஒடிசாவில் பாஜக தனித்து போட்டி என்ற பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. ஒடிசாவில் மக்களவை மற்றும் சட்டமன்ற தேர்தல் ஒரே நேரத்தில் நடைபெற உள்ள நிலையில், அங்கு 4 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. ஆதிக்க முயற்சி அடி வாங்கியுள்ளது.

## ஆளுநர் எனும் ஆடு

ஆளுநர் எனும் ஆடு
அது
எங்கும் மூக்கை நுழைக்கிறது...
பின்
அடிபட்டு
ரத்தம் சொட்டச் சொட்ட
பின் செல்கிறது.....!
சூடுபட்ட
கொப்புளங்களில் வழியும்
துர்நாற்ற மடிக்கும்
கருத்துக்களோடு
நகரில் உலா வருகிறது...
வள்ளுவனையும்
வள்ளலாரையும்
கொச்சைப்படுத்திய அது
கண்ணகியின் சேலை உருவி
அவளின் தன்மானத்தை
சீண்டிப் பார்க்கிறது....
சனாதனம் எனும்
சாக்கடை கலந்த
காவிச் சாயத்தோடு
அலையும் அது
சாவர்க்கர்
கோட்சே எனும்
பிணத்தின் கருத்தை
சுமந்தலையும் அது



கலகம் செய்கிறது....
அமைதி பூங்காக்களில் நுழைந்து
அலங்கோலம் செய்கிறது....
ஆயினும் அது
பெரியாரின் கைத்தடி பட்டு
அவர்தம் பட்டியில் அடைபடும்
ஆளுநர் எனும்
தாடியோடு அலையும்
ஆடு
அடைபடுவது எதற்காக?


எம்.பாண்டித்துரை
தொடர்புக்கு: 7358204767




## வீட்டுக்கா...
## கெஜ்ரிவால்...
## குடும்பத்தி...



கெஜ்ரிவால் அம...
கைது செய்யப்பட்ட...
எம்பி ராகுல் காந்...
குடும்பத்தினரை சந்தி...
வித்தார். இதன்பிறகு...
போலீசாரின் கட்டுப்...
வரப்பட்டதாக தகவ...
இதனை அறிந்த ...
கோபால்ராய் கெஜ்...
சென்றார். அங்கு ...
அனுமதிக்கவில்லை. ...
ரிவால் இல்லம் போலீச...
மட்டும் இல்லை என்று...
தில்லி காவல்துறை...
வைத்துள்ளது என்று...
ராகுல் காந்தி கெஜ்ரிவ...
சந்திக்க விடக் கூடா...
அவரது குடும்பத்தின...
வைக்கப்பட்டுள்ள ...
தோல்வி பயம், எந்த எ...
போகும்.



- இந்தியா கூட்டணியின் எதிர்காலமே இந்தியாவின் எதிர்காலம்!
- இந்தியா கூட்டணிக்கு ஓட்டு! பாசிச பாஜக கூட்டணிக்கு வேட்டு!




...லில்
...ல்
...னர்



...லாக்கத்துறையால் ... பின்பு காங்கிரஸ் ...தி கெஜ்ரிவாலின் ...திக்க உள்ளதாக அறி... கெஜ்ரிவால் இல்லம் ...பாட்டில் கொண்டு ...ல் வெளியாகியது. ...தில்லி அமைச்சர் ...ஜ்ரிவால் வீட்டிற்கு ...அவரை போலீசார் ... அதன்பிறகே கெஜ்... ...சாரின் கட்டுப்பாட்டில் ...யும், குடும்பத்தினரை ... வீட்டுக்காவலில் ...றும் தெரியவந்தது. ...வால் குடும்பத்தினரை ...து என்பதற்காகவே ...னர் வீட்டுக்காவலில் ...தாகத் தெரிகிறது. ...ல்லைக்ககும் பாஜக



# திமுக கூட்டணிக்கு 15 விவசாய சங்க கூட்டமைப்பினர் ஆதரவு



தேர்தல் பிரச்சாரத்துக்காக தஞ்சாவூர் வந்திருந்த திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலினை, காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் கே.வீ.இளங்கீரன் தலைமையில் 15 விவசாயிகள் சங்க கூட்டமைப்பினர் நேற்று சந்தித்து, திமுக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து அதற்கான கடிதத்தை வழங்கினர்.

பின்னர் இளங்கீரன் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழக வேளாண் பல்கலைக்கழகங்களில் ஏற்கெனவே இருந்தபடி, விவசாயிகளின் குழந்தைகளுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். வைகை குண்டாறு இணைப்பு திட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். விவசாயிகளின் விளை பொருட்களுக்கு இரட்டிப்பு விலை, நதி நீர் இணைப்பு திட்டம் போன்ற எந்த வாக்குறுதியையும் மத்திய பாஜக அரசு நிறைவேற்றவில்லை. எனவே, திமுக கூட்டணிக்கு ஆதரவு அளிக்கிறோம் என்றார்.

இதில்

1. காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் கே.வீ.இளங்கீரன்
2. தஞ்சாவூர் உழவர் மன்ற கூட்டமைப்புத் தலைவர் வெ.ஜீவக்குமார்
3. தற்சார்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பொன்னையன்
4. மதுரை மாவட்ட நஞ்சை புஞ்சை விவசாயிகள் சங்கத் தலைவர் மணிகண்டன்
5. தமிழக விவசாயிகள் பாதுகாப்பு நலச்சங்க தலைவர் ஏ.கே.சுப்பிரமணியம்
6. தேசிய வங்கியில் கடன் பெற்றோர் நலச்சங்க நிர்வாகி பொன்னுசாமி
7. கல்லணைக் கால்வாய் பாதுகாப்பு விவசாயிகள் சங்கம் ரமேஷ்
8. காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கம் தங்க. தருமராஜன்
9. தமிழக விவசாயிகள் விழிப்புணர்வு சங்கம் முஜிப்
10. இந்திய விவசாயிகள் சங்கம் தனபதி
11. ஐக்கிய விவசாயிகள் சங்கம் சங்கரையா
12. சிஃபா கரும்பு விவசாயிகள் சங்கம் ராஜேந்திரன்,
13. கடலூர் மாவட்ட உழவர் மன்ற கூட்டமைப்பு தலைவர் குஞ்சிதபாதம்
14. ராமநாதபுரம் மாவட்ட பெண்கள் விவசாயிகள் சங்கம் ராஜலட்சுமி
15. கிருதுமாநதி பாசன விவசாயிகள் சங்கம் திருவேங்கடயாதவ்

ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அடக்குவோம்

அடங்கு அடங்கு நீ ரொம்ப ஆடாதே
நீ அடங்காவிட்டால் உன்னை அடக்க வேண்டி வரும்
உன் ஆட்டம் நாளும் நீளுகிறது
அரசியல் சட்டத்தை மதிக்க மறுக்கிறாய்
சட்டமன்றத்தை மதிக்க மறுக்கிறாய்
சட்டமன்ற தீர்மானத்தை கிடப்பில் போடுகிறாய்
மக்கள் நலதிட்டத்தை செயல்படாமல் தடுக்கிறாய்
அரசின் அனுமதியின்றி அடிக்கடி கூட்டம் போகிறாய்
கூட்டங்களில் உண்மைக்கு மாறாக புளுகு மூட்டையை வீசுகிறாய்
ஜாதியும் மதமும் சாஸ்திரமும் துறந்தேன் என்றார் வள்ளலார்
ஜாதியையும் சமய நெறிகளையும் மதங்களையும்
சாஸ்திர சந்தடியில் கோத்ர சண்டைகளில்
அபிமானித்து அலைகின்ற உலகில்
அலைந்து அலைந்து நீ அழிதல் அழகல்லவே
– என்றார் வள்ளலார்
ஆனா நீயோ
வள்ளலாரை மதத்திற்குள் நுழைக்கின்றாய்
உன் மதமும் மொழியும் இந்த மண்ணிற்கு உரியது
அல்ல!
வந்தேறிய நாடோடிகளுக்கு சொந்தமானதுஎன்பதை
மறக்காதே!
நீ வாழும் மாளிகையை மதவெறி மயமாக்குகின்றாய்
மனிதனை மதிக்காத இழிவுப்படுத்தும் மதம்
உனது
இதை நீ மறுத்தாலும் விழிப்புற்றோர் மறுப்பார் இல்லை
உடனே நிறுத்து உனது மதவெறி ஆட்டத்தை
ஆட்டத்தை நிறுத்தாவிட்டால் உன்னையும் மதவெறியாட்டத்தையும்
சுவடின்றி தமிழகத்திலிருந்து துடைத்தெறிவோம்
மதவெறியரிடம் இருந்து தமிழகத்தை மீட்கும் வரை
அடங்கமாட்டோம் அடங்கமாட்டோம்



– ந.செ.இராமன்
தொடர்புக்கு: 9444250339

# பா.ஜ.க.வின் 10 ஆண்டுகள் வேலை வாய்ப்புகளில் எந்த முன்னேற்றமும் இல்லை!



2011 – 12/ 2022 – 23 காலகட்டத்தில் சுய வேலை வாய்ப்புகள் தான் அதிகரித்துள்ளன. சுய வேலைவாய்ப்புகளில் ஈடுபடும் ஆண்களின் எண்ணிக்கை இந்த கால இடைவெளியில் 51.5%லிருந்து 53.4% ஆகவும் பெண்களின் எண்ணிக்கை 56.5%லிருந்து 64.3% ஆகவும் அதிகரித்துள்ளது.

சுயவேலை வாய்ப்புகள் என்பது: விவசாயம், கிராமப்புற நெசவு, மண்பாண்டங்கள் செய்தல், நகரங்களில் சாலையோர வியாபாரம், முடி திருத்துவோர், தையல் பணி, ஜெராக்ஸ் கடை, தேநீர் கடை ஆகியவை அடங்கும்.

சுய வேலைவாய்ப்புகளில் ஈடுபடும் பெண்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட 8% உயர்ந்துள்ளது.

குடும்பம் சார்ந்த சிறு/ குறு தொழில்களில் ஊதியமில்லாமல் வேலை செய்யும் பெண்களின் எண்ணிக்கை 25% லிருந்து 33% ஆக உயர்ந்துள்ளது.

25 வயதுக்கும் கீழே உள்ள பட்டதாரிகளில் 42%ம் 2535 வயதுடைய பட்டதாரிகளில் 29% பேரும் வேலை இல்லாமல் அவதிப்படுகின்றனர்.

மறுபுறத்தில் அரசின் கணக்குபடியே 9.75 லட்சம் மத்திய அரசு பணிகள் காலியாக உள்ளன.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைகள் என மோடி கூறியது வெறும் வாய்ப்பந்தலாகவே உள்ளது. வேலையின்மையை அதிகரித்த பா.ஜ.க. அரசாங்கத்தை அகற்றுவது மட்டுமே வேலைவாய்ப்புகளை உருவாக்கும். பா.ஜ.க. அரசை விரட்டுவோம்! வேலையின்மைக்கு முடிவு கட்டுவோம்.

# பாஜக கூட்டணியில் இருந்து ராஷ்டிரிய லோக் ஜன சக்தி வெளியேறியது



மோடி அரசின் ஆதரவு மூலம் லோக் ஜன சக்தி கட்சியின் பெயர் மற்றும் சின்னத்தை தேர்தல் ஆணையத்திடம் சிராக் பஸ்வான் பெற்ற நிலையில், ராஷ்ட்ரிய லோக் ஜனசக்தி என்ற பெயரையும், புதிய சின்னத்தையும் பசுபதி பரஸ் பெற்றார். கட்சி இரண்டாக உடைந்தாலும் சிராக் பஸ்வான், பசுபதி பரஸ் ஆகியோர் பாஜகவிற்கு மிக நெருக்கமாகவே இருந்தனர். அதாவது பீகார் மாநில அரசியலில் சிராக் பஸ்வானையும், தேசிய அரசியலில் பசுபதி பரஸுக்கு ஒன்றிய அமைச்சர் பதவி அளித்து இரட்டை ஆதாயம் பெற்றது பாஜக.

இந்நிலையில், 40 மக்களவைத் தொகுதியை கொண்ட பீகார் மாநிலத்தின் பாஜக கூட்டணியில் தொகுதி பங்கீடு நிறைவு பெற்றது. பாஜக 17 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதா தளம் 16 தொகுதிகளிலும், சிராக் பஸ்வானின் லோக் ஜனசக்திக்கு 5 தொகுதிகளி லும், எச்ஏஎம் (மாஞ்சி கட்சி) மற்றும் ராஷ்டிரிய லோக் சம்தா (குஷ்வாஹா) கட்சிக்கு தலா ஒரு தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் ராஷ்ட்ரிய லோக் ஜனசக்தி கட்சிக்கு ஒரு சீட்கூட வழங்காமல் பாஜக பசுபதி பரஸை கைவிட்டது.

இந்நிலையில், அதிருப்தி அடைந்த பசுபதி பரஸ் தனது ஒன்றிய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்து, பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறினார். இவர் பாஜக கூட்டணியை எதிர்த்து பிரச்சாரம் செய்வார்.

# ரூ.20 கோடிக்கு ரூ.47,350 கோடி சன்மானம்

பாஜக ஆளும் குஜராத் மாநிலம் அகமதாபாத்தைச் சேர்ந்த டோரண்ட் குழுமம் கடந்த ஜனவரி 10, 2024 அன்று ரூ.20 கோடியை தேர்தல் பத்திரங்கள் மூலம் வழங்கியது. அடுத்த மூன்று நாட்களில் அதாவது ஜனவரி 13, 2024 அன்று டோரண்ட் குழுமத்திற்கு குஜராத் பாஜக அரசு ரூ.47,350 கோடி மதிப்பிலான முதலீடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

◆ விதியை நொந்த விவசாயி டெல்லி வீதியில் நின்றது போதாதா?
◆ சதியை நொறுக்க வாக்களிப்போம்! இந்தியா விடிய வாக்களிப்போம்!!

# தடியால் பழுத்த மாம்பழம்



"மோடியின் நல்லாட்சி தொடரவே பாஜகவுடன் பாமக கூட்டணி" என்று கூட்டணி அமைத்தது குறித்து அன்புமணி ராமதாஸ் விளக்கம் கொடுத்துள்ளார்.

**ஜீரோ மதிப்பெண் கூட தரமுடியாத மிக மோசமான ஆட்சி!**

அவரது அப்பா மருத்து வர் ராமதாஸ், கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலின் போது தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், கடந்த ஐந்தாண்டு கால ஒன்றிய பாஜக ஆட்சிக்கு எத்தனை மதிப்பெண் கொடுப்பீர்கள் என்று கேட்டதற்கு, சைபருக்கும் கீழே ஒன்றும் இல்லை. அப்படி அதுக்கும் கீழே இருந் தால் அந்த மதிப்பெண் தான் கொடுப் பேன். அவ்வளவு மோசமான ஆட்சி" என்றார்.

**200 விழுக்காடு பாஜகவோடு கூட்டணி இல்லை**

"மோடி தனது ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல இந்திய மக்களுக்கும் எதுவும் செய்யவில்லை. அவங்க சாதித்தது என்ன? என்று கேட்டால் ஒன்றும் இல்லை. அனைத்து மாநிலங்களின் அதிகாரங்களையும் தங்களது கையில் எடுத்துக் கொண் டார்கள். மேலும் எடுத்துக் கொண்டே வருகிறார்கள். பாஜகவின் நோக்கம், இந்தி மற்றும் 'இந்துத்துவா' கொள்கையை புகுத்துவதுதான். இதுதான் அவர்கள் கூறும் இந்தியா. அவங்க கூட எப்படி கூட்டணி வைக்க முடியும். நூற்றுக்கு 200 விழுக்காடு பாஜகவுடன் கூட்டணி கிடையவே கிடையாது" என்றும் ராமதாஸ் அடித்துக் கூறினார்.

இப்படி சொன்ன ராமதாஸ் தான், அதிமுகவுடன் இணைந்து அதே 2019 தேர்தலில் பாஜக கூட்டணியில் களம் இறங்கினார். தமிழ்நாட்டு மக்கள் படு தோல்வியையே பரிசாக கொடுத்தனர். அவர்களோடு கூட்டணி சேர்ந்து ஐந்து தொகுதிகள் போட்டி யிட்ட பாஜகவும் மண்ணைக் கவ்வியது.

**பாமக ஆடிய கண்ணாமூச்சி!**

இந்த முறை பாஜகவை அதிமுக கழற்றி விட்டதால், யாருடன் கூட்டணி என்பதில் கண்ணாமூச்சி காட்டி வந்தது பாமக. ஆனால், லைகா நிறுவனத்தின் தலைமை அதிகாரிகளில் ஒருவரான பாமகவின் கவுரவத் தலை வரும் சட்டமன்றக் குழு தலைவருமான ஜி.கே.மணியின் மகன் தமிழ்க்குமரனை அமலாக்கத் துறையின் வளையத்திற்குள் கொண்டுவரும் நடவடிக்கைகளை பாஜக மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

**வழக்குகளைத் தூசுதட்டிய பாஜக**

மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம் மாநிலங்களில் உள்ள இரண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கியதில் சலுகை வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில், ஒன்றிய முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சரான அன்புமணி ராமதாஸ் மீது நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும் பாஜக தூசி தட்டி எடுத்ததாக கூறப்படுகிறது. பாஜகவின் இந்த அதிரடி மிரட்டல் நடவடிக்கைகள் காரணமாகவே இரவோடு, இரவாக பாஜக கூட்டணியில் பாமக ஐக்கியமானதாக கூறப்படுகிறது. சோழியான் குடுமி சும்மா ஆடாது.

## பா.ஜ.க தலைவரே அம்பலப்படுத்துகிறார் வேட்பாளர் தேர்விலும் கல்லா கட்டும் பாஜக



மக்களவை தேர்தலுக்கு பாஜக இரண்டு கட்ட வேட்பாளர் பட்டியலை வெளி யிட்டுள்ளது. இந்த இரண்டு கட்ட வேட்பாளர்களில் 30க்கும் மேற்பட்டோருக்கு மீண்டும் பாஜக சீட் வழங்கவில்லை. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட நிலையில், பணம் தொடர்பான பிரச்சனை காரணமாகவே சிட்டிங் எம்பிக்களுக்கு சீட் தரப்பட வில்லையா? என்ற சந்தேகம் தற்போது வலுத்துள்ளது.



ஏற்கெனவே கோடிக்கணக்கில் பணம் கொடுத்தால் சீட் தருவோம் என சொந்த கட்சியினரையே பாஜக மிரட்டுகிறது என்று பாஜக மூத்த தலைவரே சொந்த கட்சியின் கல்லா கட்டும் வேலையை போட்டுடைத்து கட்சியை விட்டு ஓட்டம் பிடித்துவிட்டார்.

# தேர்தல் 2024

## ராமதாசுக்கு வாரிசும், பணமுமே பிரதானம்

**அதிமுக முன்னாள் அமைச்சர் கடும் சாடல்**



விழுப்புரம் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் சி.வி.சண்முகம் கலந்து கொண்டு பேசியுள்ளார். அப்போதுதான், "10 ஆண்டுகாலமாக கூட்டணிக் கட்சிகளையும், எதிர்க்கட்சிகளையும் உடைத்த பாஜக, அதிமுகவை எதுவும் செய்ய முடியவில்லை. தேசியமும், தமிழும் என கூறி கூட்டணி அமைத்துள்ளவர்களுக்கு தங்களின் குடும்பமும், பணமுமே பிரதானம். தங்கள் குடும்பத்தை காப்பாற்றிக் கொள்ளவே பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளனர்" என்று பாமகவை மறை முகமாக சாடியுள்ளார்.

இதேபோல அதிமுக முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியனும் பாமகவை கடுமையாக விமர்சித்துள்ளார். நாகை அதிமுக மாவட்ட அலுவலகத்தில் கட்சி வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பேசிய அவர் "தற்போது பாஜக, பாமக அமைத்துள்ள கூட்டணி கொள்கை இல்லாத கூட்டணி. இட ஒதுக்கீடு என்றால் அறவே வேண்டாம் என்கிற கட்சியான பாஜகவுடன் இடஒதுக்கீட்டிற்காக தொடர்ந்து குரல் கொடுக்கும் ராமதாஸ் கூட்டணி அமைத்துள்ளார். ஊழல் வழக்கில் இருந்து தப்பிக்கவே அன்புமணி ராமதாஸ் பாஜக கூட்டணியில் இணைந்துள்ளார்" என்று கூறியுள்ளார், காலம் கடந்த ஞானோதயம்.

## தெலுங்கானாவில் பகுஜன் கட்சி உடைந்தது



வரவிருக்கும் மக்களவை தேர்தலில், தெலுங்கானா மாநிலத்தில் முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவின் பாரதிய ராஷ்டிரிய சமிதி (பிஆர்எஸ்) கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்க முடிவு செய்யப்பட்டது. ஹைதராபாத் மற்றும் நாகர்கர்னூல் தொகுதிகளில் பகுஜன் சமாஜ் கட்சி (பிஎஸ்பி) போட்டியிடும் என அக்கட்சி தலைவர் மாயாவதி இரண்டு நாட்களுக்கு முன் அறிவிப்பை வெளியிட்டார்.

இந்நிலையில், மாயாவதியின், பிஆர்எஸ் பிஎஸ்பி கூட்டணி அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, பகுஜன் சமாஜ் கட்சியின் தெலுங்கானா மாநில தலைவர் டாக்டர் ஆர்.எஸ்.பிரவீன் குமார் சனியன்று கட்சியை விட்டு விலகுவதாக அறிவித்துள்ளார்.

"இந்தியா" கூட்டணியில் சேர பகுஜன் சமாஜ் கட்சியின் முக்கிய மற்றும் மூத்த தலைவர்கள் தொடர் அழுத்தம் கொடுத் தாலும் அதை மாயாவதி கண்டுகொள்வதில்லை. ஏற்கெனவே உத்தரப்பிரதேச மாநிலத்தின் முக்கிய தலைவர்கள் பலர் காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சியில் இணைந்த நிலையில், தற்போது தெலுங்கானாவிலும் பகுஜன் சமாஜ் கட்சி இரண்டாக உடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மோடி அரசின் பரிசு! சுங்கச்சாவடிகளில் ஏப்.1 முதல் கட்டண உயர்வு

தமிழகத்தில் உள்ள 5 சுங்கச்சாவடிகளில் ஏப்.1ம் தேதி முதல் கட்டணம் உயர்கிறது.

தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் கீழ் 63 சுங்கச்சாவடிகள் உள்ளன. இவற்றில் ஏப்ரல், செப்டம்பர் மாதங்களில் கட்டணத்தை மாற்றியமைப்பது வழக்கம். அந்த வகையில் நடப்பாண்டு ஏப்.1ம் தேதி முதல் 5 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்படவுள்ளது.

அதன்படி, அரியலூர் மாவட்டம் மணகெதி, திருச்சி மாவட்டம் கல்லக்குடி, வேலூர் மாவட்டம் வல்லம், திருவண்ணாமலை மாவட்டம் இனம்கரியாந்தல், விழுப்புரம் மாவட்டம் தென்னமாதேவி ஆகிய சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்படவுள்ளது. இவற்றில், ஒருமுறை பயணம் செய்வது மற்றும் ஒரே நாளில் திரும்பி வருவதற்கான பயண கட்டணம் ரூ.5 முதல் 20 வரையிலும், மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.100 முதல் 400 வரையும் உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல், 20க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் மாதம் முதல் கட்டணம் உயர உள்ளதாக நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுங்கச்சாவடிகள் அனைத்தும் மூடப்படும் என்று இந்தியா கூட்டணி தேர்தல் அறிக்கையில் முறியடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**இன்னும் 20 சுங்கச் சாவடிகள்**

தமிழ்நாட்டில் புதிதாக 20 சுங்கச்சாவடிகள் திறக்கப் போவதாக நெடுஞ்சாலைத்துறை அறிவித்துள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு மோடியின் தேர்தல் பரிசு.

## ஷோபா கரந்த்லாஜே மீது நடவடிக்கை தேர்தல் ஆணையம் உத்தரவு



கர்நாடகாவில் தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய ஒன்றிய அமைச்சர் ஷோபா கரந்த்லாஜேவின், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வந்து எங்கள் கர்நாடகா ஹோட்டலில், வெடிகுண்டுகளை வைக்கின்றனர்; எங்கள் மாநிலம் மீது தாக்குதல் நடத்துகின்றனர்; அவர்கள் மீது கர்நாடக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பொய்யாகப் பேசினார். அவர் மீது தேர்தல் ஆணையத்தில் திமுக சார்பில் புகார் அளிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் ஷோபா கரந்த்லாஜேவின் மீது தேர்தல் நடத்தை விதிகளை மீறியுள்ளதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கர்நாடகா தேர்தல் அதிகாரிக்கு இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. 48 மணி நேரத்திற்குள் இந்த விவகாரத்தில் அறிக்கையை தாக்கல் செய்யவேண்டுமென தனது உத்தரவில் கூறியுள்ளது.

## புதுச்சேரியிலும் ரூ.50 கோடிக்கு மக்களவை சீட் விற்பனை




பாஜக கூட்டணி ஆளும் புதுச்சேரியில் ஒரே ஒரு மக்களவை தொகுதி உள்ளது. பாஜக போட்டியிட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், மக்களவை வேட்பாளராக காரைக்காலைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரான ஜி.என்.எஸ்.ராஜசேகரனை பரிந்துரை செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாஜக ஆதரவு சுயேட்சை எம்எல்ஏவுமான சிவசங்கரன், "பணம் கொடுத்தால் மட்டுமே பாஜக சீட் வழங்குகிறது" என கூறி அடுத்தகட்ட சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், "பாஜக ஒருபோதும் மக்கள் செல்வாக்கை பார்ப்பதில்லை. பணம் தந்தால் மட்டுமே வாய்ப்பு என்ற நிலைமையை செயல்படுத்தி வருகிறது. கிட்டத்தட்ட ரூ.50 கோடி கொடுத்தால் சீட் என்கிறார்கள். பாஜக தலைமை சரியில்லை" என கூறியுள்ளார்.

**ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை என்றார் மோடி இருந்த வேலையும் பறித்துக் கொண்டார் கேடி**

தேர்தல் 2024

# வேதாந்தா நிறுவனத்திடம் ரூ.400 கோடி



13 பேரை காவு வாங்கிய தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு காரணமான ஸ்டெர்லைட் நிறுவனத்தின் வேதாந்தா நிறுவனம் ரூ.400 கோடி (தோராயமாக) தொகையை தேர்தல் பத்திரம் மூலம் வழங்கியுள்ளது. இந்நிறுவனத்திற்கு ஒன்றிய பாஜக அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியுள்ளது. மீண்டும் தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை இயக்க உதவி புரிவதாகவும் பாஜக உறுதி அளித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்காரணமாகவே ஸ்டெர்லைட் உச்சநீதிமன்றத்தில் நம்பிக்கையுடன் வழக்கு தொடர்ந்து போராடியதா? என்ற சந்தேகம் வலுத்துள்ளது.

# பாகிஸ்தான் நிறுவனத்தையும் விட்டுவைக்காத பாஜக

பாகிஸ்தானை ஒரு எதிரி நாடாக சித்தரித்து அரசியல் ஆதாயம் பெறுவது பாஜகவின் நீண்டகால வழக்கம். கராச்சியை தலைமையிடமாக கொண்டு செயல்படும் "ஹப் பவர் கம்பெனி (HUB Power company)" என்ற நிறுவனத்திடமும் தேர்தல் பத்திரம் மூலம் பாஜக நன்கொடை பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முக்கியமாக கடந்த 2019ஆம் ஆண்டு பிப்ரவரி 14 அன்று ஜம்மு காஷ்மீரின் புல்வாமா பயங்கரவாத தாக்குதலில் இந்திய ராணுவ வீரர்கள் 40 பேர் உயிரிழந்த நிலையில், நடைபெற்ற மக்களவை தேர்தலுக்காக "ஹப் பவர் கம்பெனி" நிறுவனத்திடம் பாஜக ரூ.95 லட்சம் நன்கொடை பெற்றுள்ளதாகம் கூறப்படுகிறது.

# ஹபூர் முஸ்லிம் வியாபாரி கொலை வழக்கு

**இந்துத்துவ குண்டர்கள் 10 பேருக்கு ஆயுள் தண்டனை**

கடந்த 2018 ஜூன் 16 அன்று பாஜக ஆளும் உத்தரப்பிர தேச மாநிலத்தின் ஹபூரில் இஸ்லாமியரான காசிம் என்ற ஆடு வியாபாரி, தனது உறவினர்களான சமய்தீன், யாசின் காட்டுப் பகுதியில் ஆடுகளுக்கு தீவனம் சேகரிக்கச் சென்றனர். பசுக்களை கொன்றதாக கூறி 11 பேர் கொண்ட இந்துத்துவா குண்டர்கள் பொய்க் குற்றச்சாட்டுகளை முன் வைத்து மூவர் மீதும் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் காசிம் உயிரிழந்தார். சமய்தீன், யாசின் காயங்களுடன் உயிர்தப்பினர். இது தொடர்பாக காசிமின் குடும்பத்தினர் காவல்துறையில் புகார் அளித்தனர். ஆனால் இந்துத்துவா குண்டர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட போலீசார் சமய்தீன், யாசின் ஆகிய இருவரையும் மிரட்டி மோட்டார் சைக்கிள் விபத்தின் விளைவாக காசிம் உயிரிழந்ததாக வழக்குப் பதிவு செய்தனர்.

இதனால் காசிமின் குடும்பத்தி னர் போலீசார் மற்றும் இந்துத்துவா குண்டர்களின் மிரட்டலுக்கு இடையே ஹபூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். காசிம் மற்றும் சமய்தீன் குடும்பத்தினர் உச்சநீதிமன்றம் சென்று போராடிய பின்னர், உச்சநீதிமன்ற வழி காட்டுதலின்படி ஐந்தரை ஆண்டுகளாக நடைபெற்று வரும், இந்த வழக்கு தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியது.

போலீசாரின் அறிக்கைகளை புறந்தள்ளி, சாட்சிகளின் உண்மையான விசாரணை மூலம் காசிம் விபத்தில் உயிரிழக்கவில்லை என்றும், அவர் பசுவைக் கொன்றதாகக் கூறி கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி ஸ்வேதா தீட்சித் செவ்வாயன்று தீர்ப்பு வழங்கினார்.

**காவல் அதிகாரிகளும் குற்றவாளிகளே**

157 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பில் அடித்துக்கொலை செய்யப்பட்டது மிக கொடூரமான விஷயம் ஆகும். காசிமை கொன்ற வழக்கில் தொடர்புடைய 11 பேர் (இந்துத்துவா கும்பல்) குற்றவாளி ஆவார்கள். அவர்களுக்கு ஆயுள்தண் டனை விதிக்கப்படுகிறது. மேலும் இந்த வழக்கு விசாரணையில் அலட்சியமாக இருந்த காவல் துறை அதிகாரிகள் அனைவரும் குற்றவாளிகளே. அதனால் வழக்குப்பதிவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த நீதிமன்றம் பரிந்துரைக்கிறது" என கூறப்பட்டுள்ளது.

# திருவனந்தபுரம் இரயில்வே கோட்டத்தை புறக்கணிக்கும் ஒன்றிய அரசு

**பினாய் விஸ்வம் எம்.பி. குற்றச்சாட்டு**



திருவனந்தபுரம் இரயில்வே கோட்ட வளர்ச்சியைப் புறக்கணிக்கிறது ஒன்றிய அரசு என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியச் செயலாளர் பினாய் விஸ்வம் இர யில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ்க்கு கடிதம் எழுதியுள்ளார்.

கேரளாவின் தலைநகரான திருவனந்தபுரம் வேகமாக வளர்ந்து வரும் இந்திய நகரங்களில் ஒன்று. அந்நகரத்துடன் தொடர்பு வசதிகளை அதிகரித்தால் திருவனந்தபுரத்தின் பொருளாதாரத் திறன் மற்றும் வாய்ப்பை வளர்த்தெடுத்துப் பயன்படுத்த முடியும். தொடர்பு வசதி மற்றும் சரக்குப் போக்குவரத்தில், இரயில்வே ஆகத் திறன்மிக்க போக்குவரத்து சாதனங்களில் ஒன்று. இந்திய இரயில்வேயின் வலுவான நிதிஒதுக்கீடுகளும், திட்டங்களும் இல்லாமல் இருப்பது, ஒட்டுமொத்தமாக கேரளாவின் தென்பகுதி வளர்ச்சி பெறுவதில் பெரும் இடையூறாக உள்ளது.


அடிப்படை கட்டமைப்பு மேம்பாடும், இரயில் நிலையங்களை நவீனப்படுத்துவதிலும் கவனம் குவிக்கப்பட்ட எண்ணிறந்த செயல்திட்டங்கள் திருவனந்தபுரம் கோட்டத்தில் முடிவெடுக்கப்படும் நிலையில் உள்ளன. இத்திட்டங்களில் இரயில் பாதைகளை இரட்டிப்பு ஆக்குவது, மேம்பாலங்கள் கட்டுவது, மின்சாரமயப்படுத்துவது முதலிய அடங்கும்.

சமீபத்தில் திருவனந்தபுரம் கோட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒரு வந்தேபாரத் இரயில், அதிகாரிகளால் கைவிடப்பட்டது. அத்தகைய மட்டங்களில் புறக்கணிப்பும் உதவிகரமற்ற இறுகிய போக்கும் திருவனந்தபுரத்தின் மேம்பாட்டு வாய்ப்புக்களைத் தடுக்கின்றன.

திருவனந்தபுரம் மத்திய இரயில் நிலையம், தென்னக இரயில்வேயின் கேந்திரமான நிலையங்களில் ஒன்று அது, ஒருங்கிணைந்த நிதிஒதுக்கீடு மற்றும் மேம்பாட்டிற்காகக் காத்திருக்கிறது. திருவனந்தபுரம் மத்திய இரயில் நிலையம் மற்றும் தெற்குக் கேரளப் பகுதியின்பால் பாரபட்ச அணுகுமுறை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

மக்களின் கோரிக்கைகளையும் தற்போதைய நிலையையும் கருத்தில் கொண்டு, திருவனந்தபுரத்திற்கு வந்தே பாரத் இரயில் சேவை, மேலும் கூடுதல் இரயில்கள், நல்ல தரத்தில் இரயில் பெட்டிகளை உறுதிப்படுத்துவது உட்பட இரயில்வே கட்டமைப்புகளை விரைவாக மேம்படுத்த தங்களின் உடனடி தலையீட்டை நான் வலியுறுத்துகிறேன். மேலும் இப்பகுதியின் ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக அதி விரைவு தொடர்பை உறுதிப்படுத்த செயல்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கவும் கேட்டுக் கொள்கிறேன்." என்று தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

# பாஜகவுக்கு 100 ரூபாய் என்றால் காங்கிரசுக்கு 19 காசு



2022–23ல் இப்பத்திரங்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கிற நிதியில், பாஜகவுக்கு ரூ.100 வழங்கப்பட்டிருந்தால், மற்றொரு தேசியக் கட்சியான காங்கிரசுக்கு வெறும் 19 காசுகள் மட்டும்தான் வழங்கப் பட்டிருக்கின்றன.

இது வழக்கமாக அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்படுகிற நன்கொடையாக இல்லாமல், அரசிடமிருந்து பெறப்பட்ட சலுகைகள், ஒப்பந்தங்கள், நிறுத்தப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான மறைமுகக் கையூட்டாகவே வழங்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

# மோசடிக்கான சலவை இயந்திரமா எஸ்பிஐ?

கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்கு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவை சலவை இயந்திரமாக பாஜக மாற்றிவிட்டது.

வங்கிகளின் நம்பகத்தன்மையை அழித்து கருப்புப் பணத்தை வங்கிக் கணக்கில் சேர்க்க பாஜகவின் கணக்கில் தேர்தல் பத்திரங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த தேர்தல் எழுப்பும் கேள்வி, மதச்சார்பற்ற அரசு வாழ வேண்டுமா அல்லது மதவாத அரசியல் வெற்றி பெற வேண்டுமா என்பது தான்

**- பினாய் விஸ்வம் எம்.பி.**

# 17 வயது சிறுமி பாலியல் துன்புறுத்தல்

**எடியூரப்பா மீது வழக்குப் பதிவு**



பெங்களூரு சதாசிவநகர் காவல் நிலையத்தில் 52 வயதான பெண் ஒருவர் புகார் ஒன்றை அளித்தார். அதில், "கடந்த ஜனவரியில் எனது 17 வயது மகளை 43 வயதான ஒருவர் பாலியல் துன்புறுத்தல் செய்துவிட்டார். இந்த வழக்கில் எங்களுக்கு உதவி செய்ய வேண்டி, பிப்ரவரி 2ம் தேதி முன்னாள் முதல்வர் எடியூரப்பாவை சந்தித்து பேசினேன்.

எடியூரப்பா போலீஸ் அதிகாரி ஒருவரை செல்போனில் தொடர்புகொண்டு பேசினார். பின்னர் என் மகளிடம் தனியாக பேச வேண்டும் எனக்கூறி, தன் அறைக்கு அழைத்துச் சென்றார். சிறிது நேரம் கழித்து அழுதுகொண்டே வெளியே வந்த என் மகள், எடியூரப்பா தன்னை பாலியல் துன்புறுத்தல் செய்துவிட்டதாக கூறினாள். எடியூரப்பா செல்வாக்கான அரசியல்வாதியாக இருப்பதால் அவர் மீது புகார் அளிக்க அச்சமாக இருந்தது. தற்போது வழக்கறிஞரின் உதவியோடு, புகார் அளித்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

**போக்சோ வழக்கு**

இந்த புகாரின் பேரில் எடியூரப்பா மீது போக்சோ சட்டப் பிரிவு 8 (பாலியல் வன்கொடுமை) மற்றும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 354 ஏ (பெண்ணை தாக்கி குற்றம் இழைத்தல்) ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

**சிஐடி விசாரணைக்கு உத்தரவு**

இது தொடர்பாக கர்நாடக உள்துறை அமைச்சர் பரமேஸ்வர் கூறுகையில், "இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்டவரின் புகாரின் பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். சிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டப்பட்டுள்ளது. சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்தார்.

# பாஜக ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு

2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கையில், 4 லட்சத்து 45 ஆயிரத்து 256 குற்றங்கள் பெண்களுக்கு எதிராக பதிவாகியிருக்கிறது. அதில் 65 ஆயிரத்து 743 குற்றங்கள் பாஜக ஆளும் உத்திரபிரதேசத்தில் சுட்டிக்காட்டிய சுகந்தி.

குழந்தைகள், தலித்துகள், பழங்குடிகளுக்கு எதிராக அதிகளவு குற்றங்கள் பதிவாகும் மாநிலங்களாக பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களே உள்ளன என்றார்.

**சிறு குறு தொழிற்சாலைகள் மூடி கிடக்குது!**
**ஏழை தொழிலாளர் வாயும் வயிறும் பசியில் வாடுது**



# தென்காசியில் தேர்தல் நிதியளிப்பு கூட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென்காசி மாவட்ட குழு சார்பாக, நாடாளுமன்ற தேர்தல் நிதி அளிப்பு பேரவை கூட்டம் சிவகிரியில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி. எம். மூர்த்தி, தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி, தென்காசி மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை, மாவட்டப் பொருளாளர் தி.சுப்பையா, வாசுதேவநல்லூர் ஒன்றியச் செயலாளர் ப.வேலு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பின்னர் சிவகிரி பகுதியில் உள்ள கூட்டணி கட்சி தோழர்கள் மாநிலச் செயலாளரை சந்தித்து பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தனர். இந்த கூட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் பி.சிங்காரவேலு, இரா.சமுத்திரக்கனி, மாரியப்பன், எம்.எஸ்.கிட்டப்பா மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்கள், இடைக்கமிட்டி தோழர்கள், மாதர் சங்கம், இளைஞர் மன்ற தோழர்கள் பங்கேற்றனர்.

# தஞ்சை நாடாளுமன்ற வேட்பாளர் சிபிஐ நிர்வாகிகளுடன் சந்திப்பு



நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் தஞ்சை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் ச.முரசொலி தஞ்சாவூர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகத்திற்கு வருகை தந்து தலைவர்களிடம் வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்வில் திருவையாறு சட்டமன்ற உறுப்பினரும், திமுக மாவட்டச் செயலாளருமான துரை.சந்திரசேகரன், தஞ்சை சட்டமன்ற உறுப்பினரும், திமுக மையக்குழு உறுப்பினருமான டி.கே.ஜி. நீலமேகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், வடக்கு மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி, மாவட்டப் பொருளாளர் பேராசிரியர் பாஸ்கர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் சி.சந்திரகுமார், வெ.சேவையா, ம.விஜயலெட்சுமி, ந.பாலசுப்பிரமணியன், தஞ்சை மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வினாடி - வினா விடைகள்



1 துஷ்யந்த் சவுதாலா (2014ல் 26 வயது)

2 மொரார்ஜி தேசாய் (81 வயது)

3 ராஜீவ் காந்தி (40 வயது)

4 ஜவஹர்லால் நேரு (6130 நாட்கள்)

5 1989

6 2014 நாடாளுமன்றத் தேர்தல்

# பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் 93வது நினைவு தினம்



விடுதலைப் போராட்ட வீரர்கள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் நினைவு தினம், தமிழ்நாடு முழுவதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் சார்பாக கடைபிடிக்கப்பட்டது.

**தேனி:** ஆண்டிபட்டியில் பகத்சிங் ராஜகுரு சுகதேவ் நினைவு தின அஞ்சலி கூட்டம்

பகத்சிங் ராஜகுரு சுகதேவ் நினைவு தின அஞ்சலி கூட்டம் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆண்டிபட்டி நகரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகர செயலாளர் க.முனிஸ்வன் தலைமை தங்கினார். மாவட்ட துணை செயலாளர் வே. பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி உள்ளிட்டதோழர்கள் திரளாக கலந்து கொண்டு பகத்சிங் உருவ படத்திற்கு அஞ்சலி செலுத்தினார்கள்.



**செங்கல்பட்டு:** பகத்சிங் நினைவு தினம் செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் எம்.பார்த்திபன் தலைமையில் பஞ்சந்திருத்தி கிராமத்தில் உள்ள புரட்சியாளர் பகத்சிங் திருவுருவ சிலைக்கு, ஏஐஒய்எப் முன்னாள் தேசிய குழு உறுப்பினர் க.ஜெகதீசன் மாலை அணிவித்தார். மாநில துணை தலைவர் மோ.வெங்கடேசன் கொடியினை ஏற்றி வைத்தார். ஏஐஎஸ்எப் மாவட்டச் செயலாளர் ஜெ.அஜித்குமார் மற்றும் அ.அரசு, மு.அர்சுணன், பாலாஜி, சத்யராஜ், கௌரி, சதிஷ் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள், தொகுதி குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். இறுதியாக திருப்போரூர் சட்டமன்ற தொகுதியின் செயலாளர் பா. பிரதாபன் நன்றியுரை வழங்கினார்.

**கரூர்:** கரூர் மாவட்டக் கட்சி அலுவலகத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் கரூர் மாவட்ட தலைவர் சு.பாலகிருஷ்ணன் தலைமையில் அஞ்சலி கூட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கரூர் மாவட்ட செயலாளர் கே.என். நாட்ராயன் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் கட்சியின் கரூர் மாவட்டத் துணைச் செயலாளர் சே.மோகன்குமார், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் கரூர் மாவட்ட செயலாளர் ம.லட்சுமி காந்தன், கட்சியின் கரூர் மாவட்டக் குழு உறுப்பினர்கள் சு.வடிவேல், இரா.தங்கவேல், பி.பாலன், ர.சிவசண்முக சுந்தரம், க.கலாராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் கவரப்பேட்டையில் பகத்சிங் நினைவு நாளை முன்னிட்டு, ஒன்றிய பேரவை மாநில குழு உறுப்பினர் எச். பிரபு தலைமையில் நடைபெற்றது. இதில் இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பி. வி. செந்தில், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் கோபிநாத், கவரப்பேட்டை ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார். இதில் ஒன்றிய தலைவராக ஷாகின்ஷா, செயலாளராக மோகன் பாபு உள்ளிட்டோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

**தஞ்சாவூர்**

தஞ்சாவூர் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் முத்து உத்தராபதி தலைமையில், பகத்சிங் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாவட்ட பொருளாளர் பேராசிரியர் பாஸ்கர், ஏ ஐ டி யூ சி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், அரசு பணியாளர் சங்க த.கிருஷ்ணன், விவசாய சங்க நிர்வாகிகள் ஆ.மணிமொழியன், தவச்செல்வன், நாராயணன், ஆசிரியர் சுந்தரமூர்த்தி, கட்டுமான சங்க பி.செல்வராஜ், உடல் உழைப்பு சங்க சுதா, மல்லிகா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பட்டுக்கோட்டை:** பட்டுக்கோட்டையில் மாணவர் பெருமன்றம் இளைஞர் பெருமன்றம் சார்பில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமிற்கு அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் க. காரல் மார்க்ஸ், அனைத்திந்திய மாணவர் பெருமன்ற தலைவர் த.செல்வி தலைமை வகித்தனர். இம் முகாமினை பட்டுக்கோட்டை கட்சியின் நகரச் செயலாளர் வ.விஜயன் துவக்கி வைத்தார். அனைத்திந்திய



இளைஞர் பெருமன்ற மாவட்டத் துணைச் செயலாளர் வ. வாசன் மருத்துவ முகாமில் பங்கேற்றவர்களுக்கு நன்றி கூறினார்.

**தஞ்சாவூர் தெற்கு:** தஞ்சை காவேரி சிறப்பங்காடி அருகில் உள்ள மாலை நேர காய்கறி அங்காடியில் இடதுசாரிகள் பொது மேடை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வெசேவையா தலைமை வகித்தார். பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை. மதிவாணன், சமூக ஆர்வலர் விசிறி சாமியார் முருகன், மார்க்கெட் சங்க நிர்வாகிகள் எம்.பாலமுருகன், அயூப்கான், வெங்கடேசன் ஆகியோர் பங்கேற்றனர்.

# கழிஞ்சூர் எம்.ஜீவா மறைவு

ஏ.ஐ.டி.யு.சி. டாஸ்மாக் ஊழியர் சங்க மண்டல செயலாளரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் மாவட்டக் குழு உறுப்பினரும், வேலூர் மாவட்ட மாநகர செயலாளர் கழிஞ்சூர் எம்.ஜீவா அவர்களின் தம்பியுமான எம்.மாரிமுத்து 25.03.2024 அன்று மரணமடைந்தார்.

அவரது உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் ஜி.லதா மற்றும் தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 156. அரித்து சேர்ப்பதறிவு

அறிவது அரித்துமே சேர்ப்ப தறிவு
தனித்தது தன்னா லிலை.

பருப்பொள்களிலும் இருந்து சிறிது சிறிதாக, சலித்தெடுத்துச் சேர்ப்பதுதான் சிறந்த அறிவாகும். அறிவு தானாக வந்து விடுவதில்லை.

அறிந்தே பிறந்தான் அவனியில் இல்லை
பிறந்தே அறிந்தான் பெரிது.

பிறக்கும் போது அனைத்து அறிவுடனும் எவரும் பிறப்பதில்லை. பிறந்து வளரும் போதுதான் (சூழ்நிலை முதலியவற்றால்) படிப்படியாக வளர்ந்து அறிவாளி ஆகிறான்.

**மணிப்பூர் பழங்குடி பெண்கள் கதறும் சத்தம் நாடெங்கும் எதிரொலிக்குது!**
**வெட்கமின்றி மோடி கும்பல் வாக்கு கேட்டு அவர்களின் காலைப் பிடிக்குது!**

# வாயால் வடை சுடுதல்

வாயால் வடை சுடுவது அப்படின்னா என்ன அர்த்தம்?

வாயை திறந்தால் ஒன்று பொய் சொல்ல வேண்டும். மற்றொன்று திரித்துப் பேச வேண்டும். இந்த இரண்டும் ஒரே நேரத்தில் செய்வதற்கு பெயர் வாயால் வடை சுடுவது என்பதாகும்.

உதாரணத்திற்கு ஒன்று.

ராகுல் காந்தி சக்தி குறித்து பேசினார். அதில் பிரதமரின் சக்தி எதில் இருக்கிறது என்று கூறும்போது...

- **பிரதமரின் சக்தி ஓட்டுப்பதிவு எலக்ட்ரானிக் எந்திரத்தில் உள்ளது.**
- **பிரதமர் மோடியின் சக்தி வருமான வரித்துறையில் உள்ளது**
- **சிபிஐ யில் உள்ளது**
- **அமலாக்கத் துறையில் உள்ளது**
- **தேர்தல் ஆணையத்திடம் உள்ளது.**

இன்று ராகுல் காந்தி பேசினார்



அதற்கு மோடி விமர்சனத்தை மறுக்கவில்லை. மாறாக பொய்யாகவும் திரித்தும் பேசியுள்ளார்.

சக்தி என்பது ஒவ்வொரு தாயிடம் இருக்கிறது. சக்தி என்பது பெண்களிடம் இருக்கிறது என்று பதில் பேசியிருக்கிறார்.

+ சங்கிகள் பெண்களை சக்தியாக பாவிக்கிறார்கள் என்பது அப்பட்டமான பொய் !,

மோடியின் அதிகாரத்தை சக்தியோடு ஒப்பிட்டு விமர்சித்தால் அதை பெண்களோடு ஒப்பிட்டு திரிக்கிறார்கள் !

மோடி அவர்களே

- **உங்கள் மனைவி ஜசோதா பென் என்பவரும் ஒரு சக்தி தானே. இந்த சக்திக்கு மதிப்பளிக்கவில்லையே ஏன்?**



- **மல்யுத்த வீராங்கனைகள் சக்திகள் தானே ! இவர்களின் பாதிப்பின் குரல் உங்கள் காதுகளுக்கு கேட்கவில்லையே !**
- **மணிப்பூரில் பழங்குடிப் பெண்களை நிர்வாணப் படுத்தி ஊர்வலமாக இழுத்து வந்தார்களே**



இந்த சக்திகளின் அபயக்குரல் உங்கள் கண்ணில் பட வில்லையா?

- **இந்தியக் குடியரசின் தலைவர் திரௌபதி முர்மு அவர்களும் சக்தி தானே ! நாடாளுமன்ற கட்டிடத் திறப்பு விழாவிற்கும். ராமர் கோவில் சிலை திறப்பு விழாவிற்கும் ஏன் அழைக்கவில்லை?**

குடியரசுத் தலைவராக இருந்தாலும் விதவை என்பதால் தானே விலக்கி வைத்து விட்டீர்கள் !




நீங்கள் பெண்களை சக்தியாக பார்க்கும் லட்சணம் இதுதானா?

இப்போது வாயால் வடை சுடுதல் என்பது புரிகிறதா?


PRESS & REGISTRATION OF BOOKS ACT, 1867

Registration of Newspapers (Central) Rules. 1956

FORM IV (SEE RULE 8) statement about

Ownership & other particulars about Newspaper

JANASAKTHI TAMIL WEEKLY

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |
| 2. | Periodicity of its Publication | : | Weekly |
| 3. | Printer's Name | : | A.Sivakumar |
| | Nationality | : | Indian |
| | Address | : | 142/16 Jani Jan khan Roan, Royapettah, Chennai-14 |
| 4. | Publisher's Name | : | R.Mutharasan |
| | Nationality | : | Indian |
| | Address | : | 2/128, South Street, Velur, Thiruvarur - 614 715. |
| 5. | Editor's Name | : | T.M.Murthi |
| | Nationality | : | Indian |
| | Address | : | 3/198A, Durgaiamman Nagar, Thozhur Post, Thozhur, Thiruvallur Dist - 602 025 |
| 6. | Name and Address of Shareholders holding more than one percent of the Share Capital | : | Janasakthi Trust, 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |

I, R.MUTHARASAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief

Dated: 26.03.2024 Signature of Publisher: R.MUTHARASAN


# 18வது பொதுத் தேர்தல் 7 கட்டங்களாக வாக்குப்பதிவு

**ஏப்ரல் 19**

**முதற்கட்டத் தேர்தலில் 102 தொகுதிகள்**

இதில்,
தமிழ்நாடு (39),
புதுச்சேரி (1),
சத்தீஸ்கர் (1),
மிசோரம் (1),
நாகலாந்து (1),
சிக்கிம் (1),
திரிபுரா (1 தொகுதி),
அந்தமான் (1),
ஜம்மு காஷ்மீர் (1),
மேற்கு வங்கம் (1),
உத்தரகாண்ட் (5),
உத்தர பிரதேசம் (8),
ராஜஸ்தான் (12),
மேகாலயா (2),
மணிப்பூர் (2),
மகாராஷ்டிரா (5),
மத்தியப் பிரதேசம் (6),
பீகார் (4),
அசாம் (5),
அருணாசல பிரதேசம் (2),
மேற்குவங்கம் (3)
ஆகிய மாநிலங்கள் அடங்கும்.

**ஏப்ரல் 26**

**2ஆம் கட்டத் தேர்தலில் 89 தொகுதிகள்**

இதில்
அசாம் (5 தொகுதி),
பீகார் (5 தொகுதி),
சத்தீஸ்கர் (3 தொகுதி),
கர்நாடகா (14 தொகுதி),
கேரளா (20 தொகுதி),
மத்திய பிரதேசம் (7),
மகாராஷ்டிரா (8 தொகுதி),
மணிப்பூர் (2 தொகுதி),
ராஜஸ்தான் (13 தொகுதி),
திரிபுரா (ஒரு தொகுதி),
உத்தர பிரதேசம் (8 தொகுதி),
மேற்குவங்கம் (3 தொகுதி),
ஜம்மு காஷ்மீர் (1 தொகுதி)
அடங்கும்.

**மே 7**

**மூன்றாம் கட்டத் தேர்தலில் 94 தொகுதிகள்**

அசாம் (4),
பீகார் (5),
சத்தீஸ்கர் (7),
கோவா (2),
குஜராத் (26),
கர்நாடகா (14),
மத்தியப் பிரதேசம் (8),
மகாராஷ்ரா (11),
உத்தரப்பிர தேசம் (10),
மேற்கு வங்கம் (4),
ஜம்மு காஷ்மீர் (1),
டாமன் – டையூ, தாத்ரா – நகர் ஹவேலி (2)

ஆகிய 12 மாநிலங்களிலுள்ள 94 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

**மே 13**

**நான்காம் கட்டத்தில் 96 தொகுதிகள்**

ஆந்திரப் பிரதேசம் (25),
பீகார் (5),
ஜார்க்கண்ட் (4),
மத்தியப் பிரதேசம் (8),
மகாராஷ்டிரா (11),
ஒடிசா (4),
தெலங்கானா (17),
உத்தரப் பிரதேசம் (13),
மேற்கு வங்கம் (8),
ஜம்மு காஷ்மீர் (1)

ஆகிய 10 மாநிலங்களில் 96 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது.

**மே 20**

**ஐந்தாம் கட்டத்தில் 49 தொகுதிகள்**

பீகார் (5),
ஜார்க்கண்ட் (3),
மகாராஷ்ரா (13),
ஒடிசா (5),
உத்தர பிர தேசம் (14),
மேற்கு வங்கம் (7),
ஜம்மு காஷ்மீர் (1),
லடாக் (1)

என 8 மாநிலங்களில் 49 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

**மே 25**

**ஆறாம் கட்டத்தில் 57 தொகுதிகள்**

சத்தீஸ்கர் (8),
ஹரியானா (10),
ஜார்க் கண்ட் (4),
ஒடிசா (6),
உத்தர பிரதேசம் (14),
மேற்கு வங்கம் (8),
தில்லி (7)

ஆகிய 7 மாநிலங்களில் 57 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது.

**ஜூன் 1**

**ஏழாம் கட்டத்தில் 57 தொகுதிகள்**

ஏழாம் கட்டத்தில்
பீகார் (8),
இமாச்சல பிரதேசம் (4),
ஜார்க்கண்ட் (3),
ஒடிசா (6),
பஞ்சாப் (13),
உத்தரப்பிரதேசம் (13),
மேற்கு வங்கம் (9),
சத்தீஸ்கர் (1)

என 8 மாநிலங்களில் 57 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

இந்த அறிவிப்புகளை தொடர்ந்து நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன.



**◆ கட்டுபடியான விலையைக் கேட்டால் காட்டுமிராண்டியாய் அடிக்கின்றான்**

**◆ மோடி ஆண்டது போதாதா? விவசாயி மாண்டது போதாதா?**

# அரவிந்த் கெஜ்ரிவால் கைது! எல்லை தாண்டிய ஏதேச்சதிகாரம், பாசிச தாக்குதல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்



டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது எல்லை தாண்டிய ஏதேச்சதிகாரம், பாசிச தாக்குதல் வெளிப்பாடு என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

டெல்லி மாநில அரசின் முதலமைச்சர்அரவிந்த கெஜ்ரிவால் 21.03.2024 அன்று முன்னிரவு நேரத்தில் அமலாக்க துறையால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது அமலாக்கத் துறை பலாத்கார நடவடிக்கை எடுக்க தடைவிதிக்க வேண்டும் என்ற முறையீட்டை டெல்லி உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கியுள்ள நிலையில் அமலாக்கத்துறை ஒரு மாநில முதலமைச்சரை, எதிர்கட்சி கூட்டணியின் முக்கியத் தலைவரை கைது செய்திருப்பது ஏதேச்சதிகாரத்தின் எல்லை தாண்டிய பாசிச காட்டுமிராண்டி வெறித்தன தாக்குதலின் வெளிப்பாடாகும்.

விருப்பு, வெறுப்புகள் இல்லாமல், நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெற வேண்டிய தேர்தல் நடைமுறைக்கு பெரும் குந்தகம் ஏற்படுத்தும் அப்பட்டமான அச்சுறுத்தலாகும். பொதுமக்களிடம பீதி ஏற்படுத்தி தேர்தல் ஆதாயம் தேடும் மிக மலிவான செயலாகும்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பழம் பெரும் அரசியல் கட்சியும், விடுதலைப் போராட்டத்தில் முன்னணி வகித்த பெருமை கொண்ட காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. டெல்லி மாநில அரசின் துணை முதலமைச்சர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

எதிர்கட்சிகள் ஒன்றுபட்டு, "இண்டியா" கூட்டணி உருவாக்கியுள்ளன. இந்த வலிமை வாய்ந்த கூட்டணியை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாத, பாஜக எதிர் கட்சிகளை மிரட்டி, ஒடுக்கி, கூட்டணியை சிதறடிக்கும் வன்முறைக்கு அரசியலமைப்பு அதிகாரம் பெற்ற தற்சார்பு அமைப்புகளை ஆளும் கட்சியின் ஆயுதங்களாக கையில் எடுத்துக் கொண்டுள்ளது. இந்த பாசிச வகைப்பட்ட தாக்குதலை, நாட்டு மக்கள் பேரெழுச்சி கொண்டு தடுத்து நிறுத்த வேண்டும்.

தற்போதுள்ள நிலையில் குடியரசுத் தலைவரும் மற்றும் உச்சநீதிமன்றமும் ஒன்றிய அரசின் அதிகார அத்துமீறல் நடவடிக்கைகளை சட்டரீதியாக தடுக்க முடியும் என்பதால் உடனடியாக குடியரசுத் தலைவரும், உச்ச நீதிமன்றமும் அமலாக்கத் துறையின் நடவடிக்கையில் தலையிட்டு தடுக்க வேண்டும். நாடாளுமன்ற தேர்தல் களத்தில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சம வாய்ப்பு கிடைப்பதையும், நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடைமுறைகள் அமைவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும், உடனடியாக அரவிந்த் கெஜ்ரிவால் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## அரவிந்த் கெஜ்ரிவால் குடும்பத்தினருடன் டி.ராஜா நேரில் சந்திப்பு



கைது செய்யப்பட்டுள்ள டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் வீட்டுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா சென்றார். அவருடன் கட்சியின் தேசியச் செயலாளர்கள் டாக்டர் பி.கே.காங்கோ, ராமகிருஷ்ண பாண்டா, டெல்லி மாநிலச் செயலாளர் பேராசிரியர் தினேஷ் வார்ஷ்னே ஆகியோரும் சென்றனர்.

கெஜ்ரிவாலின் மனைவி சுனிதா கெஜ்ரிவால், அவரது மகள் ஹர்ஷிதா ஆகியோரைச் சந்தித்து, "எதிர்க்கட்சி தலைவர்களை கைது செய்து சிறையிலிட்டு, இந்தியா கூட்டணியின் ஆற்றல் மிக்க குரல்களை ஒலிக்க விடாமல் தடுக்கும் மோடியின் சர்வாதிகார கொள்கைகளை ஒன்றிணைந்து போராடி முறியடிப்போம்" எனக் கூறி அவரது குடும்பத்துக்கு கட்சியின் முழு ஆதரவைத் தெரிவித்தனர்.

## மார்ச் 31இல் "இந்தியா" கூட்டணி சார்பில் புதுடெல்லியில் பிரம்மாண்ட பேரணி

கெஜ்ரிவால் கைது, மோடி அரசின் தரம் தாழ்ந்த அரசியல் நடவடிக்கை மற்றும் நாட்டில் என்ன நடக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக "இந்தியா" கூட்டணி கட்சிகள் மார்ச் 31 அன்று தில்லி ராம் லீலா மைதானத்தில் பிரம்மாண்ட பேரணி பொதுக் கூட்டத்தை நடத்த உள்ளன.

இந்த கூட்டத்திற்கு ஆம் ஆத்மி கட்சி தலைமை தாங்கும் நிலையில், தில்லி அமைச்சர் கோபால் ராய் "இந்தியா" கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

**சீல் அகற்றப்படுமா?**

கெஜ்ரிவால் கைது காரணமாக ஆம் ஆத்மி கட்சி தில்லியில் மூன்றாவது நாளாக போராடி வருகின்றன. போராட்டத்தை ஒடுக்க ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள தில்லி காவல்துறை ஐடிஓ உள்ளிட்ட முக்கிய சாலைகளுக்கு சீல் வைத்துள்ளது. சீல் வைக்கப்பட்ட சாலையில் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், "இந்தியா" கூட்டணிக் கட்சிகள் சார்பில் பேரணி நடைபெறவுள்ள இடமான ராம்லீலா மைதானமும் ஐடிஓ மார்க்கத்தில் உள்ளதால், முடக்கப்பட்டுள்ள சாலைகள் திறக்கப்படுமா, அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தொடர்ந்து சாலைகளை மோடி அரசு சீல் வைக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. தடை போட்டாலும் தடையை மீறி பேரணி நடக்கும்.

# குடியுரிமை திருத்தச் சட்டம் மீது உச்சநீதிமன்றத்தில் சிபிஐ வழக்கு

ஒன்றிய அரசு 2019 குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கான (சிஏஏ) விதிகளை அறிவிக்கை செய்து, அவை 2024 பொதுத் தேர்தல்களுக்கு முன் அமலாக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

2019ல் சிஏஏ அறிமுகம் செய்யப்பட்ட நிலையிலேயே நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் கடுமையான பெருந்திரள் மக்கள் எதிர்ப்பைச் சந்தித்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன் அவசர அவசரமாகச் சட்டம் கொண்டு வரப்பட்டாலும் அது செயலற்ற நிலையிலேயே வைக்கப்பட்டு இருந்தது. அப்படி உறக்கநிலையில் வைக்கப்பட்டிருந்த சட்டம், பொதுத் தேர்தல்களை ஒட்டி அமலாக்கப்படுவது, இந்தியாவில் பல்வேறு சமூகங்களின் மக்கள் இடையே பதற்றங்களைத் தூண்டி, பிளவுகளை ஏற்படுத்தும் பாஜகவின் விரிவான சதித் திட்டங்களில் ஒன்று.



பிளவுபடுத்துவது மட்டுமின்றி மக்களைப் பாகுபடுத்தும் அச்சட்டம், நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்ட விழுமியங்களுக்கு எதிரானது, சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளாலும் எதிர்க்கப்படுவது. மக்கள் குடியுரிமை பெற அவர்கள் சார்ந்த மதத்தை நிர்ணயகரமான ஒரு காரணியாக வைப்பது நமது அரசியலமைப்புச் சட்டத்தின் உயிர் நாடியான உணர்வுகளை முழுமையாக மறுப்பதாகும் என்று கூறிய கேரள மாநில சிபிஐ செயலாளரும், நாடாளுமன்றக் கட்சித் தலைவருமான பினாய் விஸ்வம் குடியுரிமை திருத்தச் சட்டத்தை அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் எதிர்த்துப் போராடுவோம் என்றார். தொடர்ந்து சிஏஏ அமலாக்கத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தை அவர் அணுகியுள்ளார்.

### இசையில் ஏது சாதிய ஏற்றத்தாழ்வு

# டி.எம்.கிருஷ்ணாவுக்கு விருது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

இசையில் ஏது சாதிய ஏற்றத்தாழ்வு டி.எம்.கிருஷ்ணாவுக்கு விருது வழங்குவதை வரவேற்கிறோம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வரவேற்றுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

கர்நாடக சங்கீத வரலாற்றில் புதுப்பாதை வகுத்து செயல்படுவர் இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணா .

மனித சமுக மேன்மைக்கும். நல்லிணக்க சூழல் நிலைத்து நீடிக்கவும் கர்நாடக இசைத் துறையில் முற்போக்கு சிந்தனையை விதைத்து வரும் கர்நாடக இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணாவை சென்னை மியூசிக் அகாடமி "சங்கீத கலாநிதி" விருதுக்கு தேர்வு செய்திருப்பது பொருத்தமானது, வரவேற்று மகிழதக்கது.

ஆனால், சிலர் மதவாத கண்ணோட்டத்திலும், சாதிய ஏற்றத் தாழ்வுகளை கட்டி அழும் பிற்போக்கு கருத்து நிலையில் ரஞ்சனி, காயத்திரி சகோதரிகள் இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா மீது காழ்ப்புணர்வை கருத்துக்களாக கொட்டி வருவதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கண்டிக்கிறது.

கர்நாடக சங்கீதத்தை சாதிய எல்லைக்குள் அடைத்து வைத்திருந்த ஆதிக்க சக்திகளிடம் இருந்து மீட்டு, அடித்தட்டு மக்களிடம் கொண்டு சேர்த்து, அவர்களும் இணைந்து கொண்டாடும் நிலைக்கு கொண்டு சென்ற இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணா. இவர் ஏற்கனவே "மகசேசே" உள்பட பல விருதுகள் பெற்றவர். அவர் மியூசிக் அகாடமியின் "சங்கீத கலாநிதி விருது" பெற்றதன் மூலம் அந்த விருதுக்கு பெருமை சேர்த்துள்ளது கர்நாடக இசைத் துறையில் டி.எம்.கிருஷ்ணா மேலும் பல புதுமை படைத்து சிகரம் நோக்கி உயர்ந்து, குன்றாப் புகழ் பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

**நரேந்திர மோடி அண்ணாச்சி! 44 தொழிலாளர் சட்டம் 4ஆக ஆச்சி!**
**தொழிலாளர் வாழ்க்கை மண்ணாச்சி! இந்தியா கூட்டணி வெற்றி உறுதியாச்சு!**

1 ஆம் பக்க தொடர்ச்சி

உருப்படியாக எதையாவது பெற்றுத் தந்தாரா?

### பாஜகவின் பாதம் தாங்கி

பாஜகவின் பாதம் தாங்கியாக, உதவாக்கரையாக இருந்த பழனிசாமி, இப்போது என்ன சொல்கிறார் தெரியுமா? ‘‘ஆளுநரை நியமிக்கும்போது, முதலமைச்சரின் ஆலோசனை பெற்று நியமனம் செய்ய வேண்டும்’’ என்று தி.மு.க. சொன்னதையே ஜெராக்ஸ் எடுத்திருக்கிறார்.

நான் கேட்கிறேன், பழனிசாமி அவர்களே, திமுக அரசுக்குக் குடைச்சல் கொடுத்துக்கொண்டே இருக்கிறாரே ஆளுநர்.. அவரைக் கண்டித்து ஒரு நாளாவது ஒரு அறிக்கையாவது விட்டிருக்கிறீர்களா? இல்லையே!

அதிமுக ஆட்சியில், ஆளுநர் ஆய்வுக்குச் செல்கிறேன் என்று புறப்பட்ட போது, அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்தியது தி.மு.க.!

தொல்லை தருவதையே தன்னுடைய அன்றாடப் பணியாக வைத்திருக்கும் ஆளுநருக்கு எதிராக இப்போதும் உச்சநீதிமன்றம் வரைக்கும் சென்று போராடுகிறது திமுக!

கைகட்டி, வாய் மூடி, முதுகு வளைந்து, பாதம் தாங்கும் பழனிசாமி அவர்களே.. உங்களுக்கு வீரவசனங்கள் தேவைதானா? மோடி அரசு கொண்டு வந்த குடியுரிமை திருத்தச் சட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் சேர்க்கப்பட வில்லை; அந்தச் சட்டத்தை ஆதரித்து நாடாளுமன்றத்தில் அதிமுக ஒட்டு போட்டதால்தான் அந்தச் சட்டமே இன்றைக்கு அமலுக்கு வந்திருக்கிறது.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் வரக் காரணமாக இருந்துவிட்டு, ‘இலங்கை தமிழர்களுக்கான இரட்டைக் குடியுரிமை கொண்டு வருவோம்’ என்று சொல்வதற்குப் பெயர் என்ன? பித்தலாட்டம்தானே!



### உழவர்கள் வயிற்றில் அடித்த பாஜக

மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து உழவர்களின் வயிற்றில் அடித்தார்கள் பாஜக ஆட்சியாளர்கள். இதனை எடுத்துக் கூறியபோது, பாதம் தாங்கி பழனிசாமி என்ன கூறினார்?

“விவசாயிகள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். நான் அவர்களுடன் விவாதம் நடத்தத் தயார்’’ என்று கூறினார்.

‘நானும் ஒரு விவசாயி’ என்று பச்சைத் துண்டைப் போட்டுக்கொண்டு, பச்சைத் துரோகம் செய்தவர்தான் பழனிசாமி!

மூன்று வேளாண் சட்டத்துக்கு எதிராக ஒன்றரை ஆண்டு காலம் உழவர்கள் தலைநகர் டெல்லிக்கு வந்து போராடினார்கள். வெயிலிலும், கடும் குளிரிலும் படுத்திருந்த உழவர்கள் ஏராளமான பேர் பலியானார்கள்.

அவர்களை எல்லா வகையிலும் சித்ரவதை செய்தது பாஜக அரசு. ஆனால், எதற்கும் அஞ்சாமல், பின்வாங்காமல் அவர்கள் நின்றதைப் பார்த்து தான் மூன்று வேளாண் சட்டங்களை இறுதியில் பாஜக வாபஸ் வாங்கியது. அப்போது ஒன்றிய பாஜக அரசு உழவர்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியது.

### முள்வேலி - ஆணிப்படுக்கை

ஆனால், அந்த வாக்குறுதிகள் எதையும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நிறைவேற்றவில்லை. அதனால் மீண்டும் டெல்லியில் உழவர்கள் போராட்டத்தைத் தொடங்கி விட்டனர். டெல்லிக்குள் அவர்கள் நுழைந்துவிடுவார்களோ என்று பயந்து இரும்பு முள்வேலி, சாலைகளில் ஆணிப் படுக்கை அமைத்திருக்கிறது பாஜக அரசு.

பாகிஸ்தான் எல்லையை விட, மோசமான சூழலை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதுவரை நான்கு உழவர்கள் இறந்துவிட்டனர். இந்திய நாட்டுக்குள் ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகளைவிடச் சொந்த நாட்டு விவசா யிகள்தான் பிரதமர் மோடியின் கண்ணுக்கு எதிரிகளாகத் தெரிகிறார்கள்.

ஏழைத் தாயின் மகன் என்று சொல்லிக்கொள்ளும் பிரதமர் மோடி ஆட்சியில் விவசாயிகள் நிலைமை இதுதான். தமிழ்நாட்டு உழவர்களையாவது நிம்மதியாக இருக்க விட்டாரா பிரதமர் மோடி? அதுவும் இல்லை.

### காவிரி பிரச்சனையில் துரோகம்

காவிரி பிரச்சனையில் பாஜகவும் – அதிமுகவும் செய்த துரோகங்களை டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்த உங்களால் மறந்திருக்க முடியாது.

காவிரியில் தமிழ்நாட்டு உரிமைகளுக்காகத் தலைவர் கலைஞர் எத்தனையோ செய்திருக்கிறார். காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று, 1969ஆம் ஆண்டு முதன்முதலாகக் குரல் கொடுத்ததில் இருந்து, காவிரி இறுதித் தீர்ப்பு வாங்கியது வரைக்கும், டெல்டா உழவர்களுக்காகத் தலைவர் பாடுபட்டது அத்தனையும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்! ஆனால், அதிமுகவும், பாஜகவும் செய்தது என்ன? வரலாற்றுப் பக்கங்களைக் கொஞ்சம் புரட்டிப் பார்க்கலாமா?

காவிரி பாசன உழவர்களின் பாரம்பரிய உரிமையைக் காக்க, காவிரி மன்ற இறுதித் தீர்ப்பில் கூடுதலாக 60 டி.எம்.சி. நீர் கோரி 2007ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு சிறப்பு முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கைக் கூட அடுத்து வந்த அதிமுக அரசு ஒழுங்காக நடத்தவில்லை.

ஒன்றிய பாஜக அரசு உச்சநீதிமன்றத்தில் என்ன சொன்னார்கள்? “காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட முடியாது’’ என்று வாதாடினார்கள்! அது மட்டுமா சொன்னார்கள்? ’’காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது உள்ளிட்ட நடுவர் மன்றத்தின் உத்தரவுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் வேண்டும். மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்த் தகராறு சட்டத்தில் இதற்கான பல்வேறு விதிகள் இருக்கிறது. இதுகுறித்து உத்தரவிட உச்சநீதிமன்றத்துக்கே அதிகாரம் இல்லை. எனவே, உச்சநீதிமன்றம் இந்த உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும்’’ என்று உச்சநீதிமன்றத்தில் மனு போட்ட அரசு ஒன்றிய பாஜக அரசு.

“இந்த விவகாரத்தில் நீங்கள் தலை யிட வேண்டாம், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்’’ என்று ஒன்றிய அரசு வழக்கறிஞர் உச்சநீதிமன்றத்தில் கூறினார்.

அதிகாரம் உண்டு என்று சொல்லி காவிரி உரிமையை நிலைநாட்டியது உச்சநீதிமன்றம்தான். நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை உறுதி செய்து 2018ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அப்போதும், தமிழ்நாட்டின் காவிரி நீர் உரிமையில் 14.75 டி.எம்.சி.யை விட்டுக் கொடுத்தது பழனிசாமிதான்.

உச்சநீதிமன்றத் தீர்ப்புப்படி காவிரி ஆணையம் அமைக்கப்பட்டு உடனடியாக நீர் தாவா முறைப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். தமிழ்நாட்டு மக்கள்தான் நமக்கு வாக்களிப்பதில்லையே என்று ஒன்றிய பாஜக, அதைச் செயல்படுத்தவில்லை.

உடனடியாகக் காவிரி ஆணையம் அமைக்க வேண்டும் என்று போராடியதும் திமுக தான். தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடிக்குக் கருப்புக் கொடி காட்டினோம். “கோ பேக் மோடி’’ என்று சொன்னோம். நான் காவிரி உரிமை மீட்புப் பயணத்தை மேற்கொண்டேன்.

இரண்டு குழுக்களாக இந்தப் பயணத்தைத் திமுக நடத்தியது. மதச்சார்பற்ற கட்சிகளோடு ஒன்று சேர்ந்து, நாம் இதை நடத்திக் காட்டினோம். திருச்சி முக்கொம்பில் இருந்து பயணம் மேற்கொண்டேன். காவிரி மேலாண்மை வாரியம் என்ற பெயரில் டெல்லி யில்தான் அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் கூறினோம்.

ஒன்றிய பாஜக அரசு அதிகாரமற்ற ஒரு அமைப்பைத் தொடங்கியது. அதையும் பழனிசாமி அரசு தட்டிக் கேட்கவில்லை. ஒன்றிய அரசின் ஜல்சக்தி துறையுடன் இதைச் சேர்த்துவிட்டார்கள். அதையும் பழனிசாமி அரசு தட்டிக் கேட்கவில்லை. முதுகெலும்பு இல்லாமல் பாஜக அரசுக்குத் தலையாட்டிக் கொண்டிருந்தார் பழனிசாமி. இந்த இரண்டு பேரின் துரோகத்தையும் உணர்ந்து, இவர்களை டெல்டா மக்கள் முழுமையாகப் புறக்கணிக்க வேண்டும்’’ என்று முதலமைச்சர் ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.


## தேர்தலுக்கான தப்பாட்ட பயிற்சி முகாம்

நாள்: 1.4.2024, காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை

இடம்: கோவை மில் தொழிலாளர் சங்கம் பண்ணை தோட்டம், அக்ரஹார சாமகுளம் வெள்ளமடை வழி, கோயமுத்தூர்.



தொடர்புக்கு: 9486412755

## கிளர்ச்சிப் பிரச்சார பேச்சாளர் பயிற்சி முகாம்

நாள்: 28.3.2024, காலை 10 மணி.


இடம்: சிங்கப்பூர் பிளாசா கௌரி மினி மஹால், திருச்சி



தொடர்புக்கு:
9942624316, 80729990871, 9952548584







## மோடியின் ராணுவமும் காவல்துறையும் மக்களை காக்கவா? உரிமைக்காக போராடும் விவசாயிகளை தாக்கவா?

Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday

# பரப்புரை களத்தில் வெற்றி வேட்பாளர்கள்






'இந்தியா' கூட்டணி சார்பாக திருப்பூர் தொகுதியில் போட்டியிடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் கே.சுப்பராயன், சின்னியம்பாளையம் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி விட்டு தேர்தல் பரப்புரையைத் தொடங்கினார்.

திருப்பூரில் மனிதநேய ஜனநாயக கட்சி சார்பாக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் உரையாற்றிய வேட்பாளர் கே.சுப்பராயன், ஜனநாயகமும் அரசியலமைப்புச் சட்டமும் பாதுகாக்கப்பட மோடி அரசு அகற்றப்பட வேண்டும். இந்தியா கூட்டணி பெரும் வெற்றி பெற வேண்டும் என்று கூறினார். அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாநகர மேயர் தினேஷ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஈரோடு வடக்கு மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகளுடன் வேட்பாளர் கே.சுப்பராயன் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் கலந்து கொண்டார்.





திமுக தலைமையிலான கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் நாகப்பட்டினத்தில் நடைபெற்றது. இதில், நாகை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் வை.செல்வராஜ் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். வேட்பாளர் வை.செல்வராஜை ஐந்து லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய பாடுபடுவோம் என கூட்டத்தில் உறுதியேற்றனர்.

நன்னிலம், குடவாசல், கீழ்வேளூர், வலங்கைமான் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்ற வெற்றி வேட்பாளர் செல்வராஜ், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் நிர்வாகிகளிடம் ஆலோசனை நடத்தினார். பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வது என உறுதியேற்றனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள் முதல் பட்டியல்

| மாநிலம் | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| தமிழ்நாடு | திருப்பூர் | கே.சுப்பராயன் |
| | நாகப்பட்டினம் | வை.செல்வராஜ் |
| கேரளா | திருவனந்தபுரம் | பண்ணியான் ரவீந்திரன் |
| | வயநாடு | ஆனி ராஜா |
| | திருச்சூர் | வி.எஸ்.சுனில் குமார் |
| | மாவேலிக்கரா | சி.ஏ.அருண்குமார் |
| பீகார் | பெகுசராய் | அவதேஷ்குமார் ராய் |
| மத்திய பிரதேசம் | சிதி | சஞ்சய் குமார் நாம்தேவ் |
| | சதோல் | சமர் ஷா |
| சட்டீஸ்கர் | பஸ்தர் | ஃபூல்சிங் கச்லம் |
| மகாராஷ்டிரா | பர்பானி | ராஜன் ராமசந்திர சிர்சாகர் |

## இரா.முத்தரசன் தேர்தல் பரப்புரை பயணம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நாடாளுமன்றத் தேர்தல் சுற்றுப்பயண விவரம்:

நடைபெறும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் 28.03.2024 ஆம் தேதி முதல் 17.04.2024 ஆம் தேதி வரை தமிழ்நாடு முழுவதும் வாக்கு சேகரிப்பு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அவரது சுற்றுப் பயணம் விவரம் வருமாறு:

| தேதி | கிழமை | தொகுதி |
|---|---|---|
| 28.03.2024 | வியாழன் காலை | பெரம்பலூர் |
| | வியாழன் மாலை | துறையூர், மண்ணச்சநல்லூர் |
| 29.03.2024 | வெள்ளி காலை | அரியலூர் |
| | வெள்ளி மாலை | ஜெயங்கொண்டம் |
| 30.03.2024 | சனி | சென்னை மாநில மையம் |
| 31.03.2024 | ஞாயிறு | |
| 01.04.2024 | திங்கள் (காலை) | வேலூர், குடியாத்தம் |
| | திங்கள் (மாலை) | திருப்பத்தூர் |
| 02.04.2024 | செவ்வாய் | கிருஷ்ணகிரி |
| 03.04.2024 | புதன் | தருமபுரி |
| 04.04.2024 | வியாழன் | சேலம் |
| 05.04.2024 | வெள்ளி | திருவாரூர், மன்னார்குடி |
| 06.04.2024 | சனி காலை | திருச்சி மாநகர், திருவெறும்பூர் |
| | சனி மாலை | மணப்பாறை |
| 07.04.2024 | ஞாயிறு | விழுப்புரம் |
| 08.04.2024 | திங்கள் காலை | கடலூர் |
| | திங்கள் மாலை | சிதம்பரம், சீர்காழி |
| 09.04.2024 | செவ்வாய் | புதுச்சேரி |
| 10.04.2024 | புதன் | தஞ்சாவூர் தெற்கு |
| 11.04.2024 | வியாழன் | நாகப்பட்டினம் தொகுதி |
| 12.04.2024 | வெள்ளி | திருப்பூர் தொகுதி |
| 13.04.2024 | சனி காலை | திண்டுக்கல் |
| | சனி மாலை | மதுரை |
| 14.04.2024 | ஞாயிறு காலை | சத்தியமங்களம் |
| | ஞாயிறு மாலை | கோவை |
| 15.04.2024 | திங்கள் காலை | இராமநாதபுரம் |
| | திங்கள் மாலை | விருதுநகர், தென்காசி |
| 16.04.2024 | செவ்வாய் | தூத்துக்குடி |
| 17.04.2024 | புதன் | நாகப்பட்டினம் தொகுதி |



**கொள்ளையோ கொள்ளை! தேர்தல் பத்திர மோசடி கொள்ளை!**
**மோசடி கொள்ளையர்களை முகத்தில் அடித்து விரட்டுவோம்!**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.